விலை: 30.00
பக்கங்கள்: முப்பத்து இரண்டு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 01 புதன்கிழமை (15.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 27


# ஜெனிவா விவகாரம்

# தமிழரின் வாழ்வியல்



அனைவருக்கும்
இனிய
தைத்திருநாள்
வாழ்த்துக்கள்

- வலம்புரிக் குடும்பம்

## அமெரிக்க உதவிச் செயலர் இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பாக முன் வைக்கப்படவுள்ள பிரேரணை சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளருடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

(31ஆம் பக்கம் பார்க்க)



## தெய்வீக வர்ணக் கலண்டர்

நாளை உங்கள் வலம்புரியில் தவறாது கேட்டு வாங்குங்கள்

## தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியாவால் வழங்கமுடியாது

### அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிக்கு தமிழ் ஊடகங்களே காரணம்

பிரதமர் மகிந்த தெரிவிப்பு 03

## கைது - தண்டனையின் பகுதியல்ல சட்டத்தை கவனமாக கையாளுங்கள்

### பொலிஸாருக்கு ஜனாதிபதி கோட்டா உத்தரவு

(கொழும்பு)

கைது நடவடிக்கைகள் தண்டனையின் ஒரு பகுதியல்ல என்பதுடன், கைது செய்யப்படும் நபரின் நற்பெயருக்கும் சமூக அந்தஸ்த்திற்கும் பெரிதும் பாதிப்பு செலுத்தக் கூடியது என்பதால் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மிகவும் கவனமாகவும் சட்ட திட்டங்களை முழுமையாக பேணியும் நடைமுறைப்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜய சுந்தரவுக்கு 31

## டெங்கால் மன்னாரில்

மேலும் ஒருவர் மரணம்



(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இன்னுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று 31

### அலைபேசி உரையாடல் தொடர்பில்

## ரஞ்சன் ராமநாயக்க நேற்று இரவு கைது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாதிவெலயில் அமைந்துள்ள அவரின் வீட்டில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் 31

### ஐ.தே.க. அரசு யாழில்

## தமிழருக்கு வேலை வழங்காது சிங்களவருக்கு வேலை வழங்கியுள்ளது

### இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள அரச அலுவலகங்களில் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்காது தெற்கிலுள்ளவர்களுக்கே கடந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வேலைவாய்ப்புக்களை வழங்கியது என இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே சுட்டிக்காட்டியுள்ளார். 31

### ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில்

## உலகின் பலம்வாய்ந்த நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் ஒரேநாளில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் உலகில் பலம்வாய்ந்த நான்கு நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் கடந்த 24மணி நேரத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் எலிஸ் வேல்ஸ், சீன' 31

## தென்னை மரத்திலிருந்து கீழே விழுந்தவர் உயிரிழப்பு

### சரசாலை தெற்கில் சம்பவம்

(சரசாலை)

தென்னை மரத்திலிருந்து தவறுதலாக கீழே விழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். சரசாலை தெற்கைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் வயது 46 என்பவர் தென்னை மரத்தில் ஏறியபோது 31


### முன்னாள் அமைச்சர் ராஜிதவிடம்

## குற்றப்புலனாய்வு பிரிவு 4 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றப் புலனாய்வு பிரிவில் நேற்று ஆஜராக முன்னிலையாகியிருந்தார். அவரிடம் சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 31

# யாழ். நகரில் பறந்த சர்ச்சைக்குரிய பௌத்த கொடி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர மத்தியில் நேற்றுக் காலை பௌத்த கொடி ஒன்று கட்டப்பட்டு, மலர் சூட்டப்பட்டிருந்ததால் பெரும் சர்ச்சை எழுந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை இளைஞர்கள் சிலர் அதனை அகற்றியுள்ளனர்.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக உள்ள வீதியின் நடுவே கற்கள் மற்றும் இரும்பு குழாய்கள் கொண்டு வந்து போடப்பட்டு, அதன் மீது பௌத்த கொடி ஒன்று கட்டப்பட்டு மலர் சூட்டப்பட்டிருந்தது. (ம-3,18)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# ஒரு நாட்டில் ஒரு தேசிய கீதம் தான் இருக்க வேண்டும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஒரு நாட்டில் ஒரு தேசிய கீதமே இருக்க வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதத்தை இசைக்க வேண்டும் என அரசாங்கம் எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. வித்தியாசமான கருத்துக் கொண்ட அரசியல்வாதிகள் சிலர் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மாத்திரம் பாடவேண்டும் என கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும், அது அரசாங்கத்தின் தீர்மானமாக கருத முடியாது.

பல்வேறு நிகழ்வுகளின் போதும் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் இசைப்பதற்கு எந்தவித தடையும் இல்லை.

ஒரு நாட்டில் ஒரு தேசிய கீதமே இருக்க வேண்டும் , பல்வேறு மொழிகளைப் பேசும் இந்தியாவில் கூட ஒரு மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

### மார்ச் மாதம் 01ஆம் திகதி முதல்

# தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் ஆயிரம் ரூபாய்

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு



மார்ச் மாதம் 01ஆம் திகதி முதல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்த வேதனம் ஆயிரம் ரூபாயாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனுடன் இணைந்ததாக உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட தோட்டத்துறையின் அனைத்து பகுதிகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேயிலை தொழிற்துறையின் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள வரி விலக்கு, உரமானியம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்கள் அதில் உள்ளடங்கும். இந்த நிவாரணங்கள் பெருந்தோட்ட கம்பனிகளுக்கே கிடைப்பதால் அதன் நன்மைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)


## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இலக்கம் : PA52 - 18.03.1972

## வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

**பதவி, குறியீட்டு இல : கணனிப் பக்க உருவாக்குநர் 322/15**

சம்பள அளவுத்திட்டம் : 15545-130X10-140X10- 18245.00 (04/2018ற்கு அமைய)

(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

க.பொ.த சா.தர பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் உள்ளடங்கிய 06 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE அல்லது அதை ஒத்த கணனி பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்தமைக்கான தகைமைச் சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஓராண்டுக்கு குறையாத செயல் அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.அட்டை.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பன உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு, பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
4. விண்ணப்பங்கள் "தலைவர் பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி பளை" எனும் முகவரிக்கு எதிர்வரும் 25.01.2020ந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஒப்படைத்து உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
5. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கணனி பக்க உருவாக்குநர், பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(க.இராசதுரை)
தலைவர்
பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கண்டி வீதி, பளை
14.01.2020 (C-8988)



# கண்ணீர்அஞ்சலி



எமது சக நண்பன் திரு.லக்ஷ்மன்
அவர்களின் அன்புத் தந்தை

**அருள்பிரகாசம்
அன்ரனி சில்வெஸ்ரர்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ
பிரதிநிதிகள் சங்கம்

(1877)



# கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி தேஜா கமலேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நவநீதம்
தாமோதரம்பிள்ளை**

(முன்னாள் அதிபர் -
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயரில் பங்குகொள்ளும் ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(C-8989)

# தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியாவால் வழங்க முடியாது

## அரசாங்கத்திற்கும் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிக்கு தமிழ் ஊடகங்களே காரணம்



### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியாவால் ஒருபோதும் வழங்க முடியாது. மாறாக தமிழ் மக்களுக்கான தீர்வை இலங்கை அரசாங்கத்தால் மாத்திரமே வழங்க முடியும் எனவும் அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்க தமிழ் ஊடகங்களே பிரதான காரணம் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.**

தமிழ் ஊடகப் பிரதானிகள் உடனான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போதே பிரதமர் மகிந்த மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

'தமிழ் மக்களுக்கு தேவையான அரசியல் தீர்வினை இந்தியாவே பெற்றுக் கொடுக்க வேண்டும் என சில தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், சில தமிழ் ஊடகங்கள் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களையே தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. இதுவே தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கக் காரணமாகின்றது.

எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பதனை தமிழ் ஊடகங்கள் தவிர்க்க வேண்டும். அத்துடன், வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை அரசாங்கம் தொடர்ந்தும் செய்யும்.

**13 பிளஸ் குறித்த எனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்பதை மீண்டும் கூறிக்கொள்கின்றேன். தமிழ் மக்களால் கொண்டுவரப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை.**

அதேபோன்று வடக்கிலுள்ள தமிழ் மக்கள் தற்போது பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் காரணமாக வடக்கில் உள்ள மீனவர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த முழுப்பொறுப்பையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைத்துள்ளேன்.

அத்துடன், எனது இந்திய விஜயத்தின்போதும் நான் இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளேன்.


மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபாயினை ஐந்து வருடங்களுக்குள் பெற்றுக் கொடுப்பதாகவே உறுதிமொழி வழங்கிருந்தோம். அதை உடனடியாக நிறைவேற்றுமாறு கோருவது தவறானது.

எமது தற்போதைய அரசாங்கத்தில் ஏன் முஸ்லிம் அமைச்சர்கள் இல்லை என கேட்கின்றீர்கள். ஶ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை.

அதேபோன்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அமைச்சரவையில் நியமிக்குமாறு எந்தவொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பரிந்துரை செய்திருக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபாவும் தனக்கு அமைச்சுப் பதவி வேண்டாம் எனக் கூறிவிட்டார். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எமது தரப்பில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் வெற்றி பெற்றால் அவருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவது குறித்து தீர்மானிப்போம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆட்லறி குண்டுகள் மீட்பு!



(சாவகச்சேரி)

வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அலுவகத்திற்கு முன்பாக ஆட்லறி குண்டுகள் மீட்கப்பட்டன. குடிநீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி புளியடிப் பகுதியில் ஏ-9 வீதியில் நிலத்தை தோண்டிய போது இவ் வெடிபொருட்கள் வெளிப்பட்டன. (இ-114)

## வரி நிவாரணங்களை மக்களுக்கு வழங்காத வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப்படும் வரி நிவாரணங்களை மக்களுக்கு வழங்காத வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

இது தொடர்பில் நுகர்வோர் விவகார ஆணையம் மற்றும் உள்நாட்டு வருவாய் திணைக்களத்திற்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.



சில்லறை, மொத்த மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான வற்வரி குறைப்பு பயன்கள் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை என பொதுமக்கள் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்ததாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

அதற்கமைய, 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த, மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.


மொத்த இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் அதற்கமைய செயற்படுகிறார்களா? என்பதைத் தொடர்ந்து கண்காணிக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (இ-7)

# டேவிட் வோர்னர் – ஆரோன் பிஞ்ச் தரமான இணைப்பாட்டம்
# இந்தியாவை சொந்த மண்ணில் வீழ்த்திய அவுஸ்திரேலியா



இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் டேவிட் வோர்னர் மற்றும் பிஞ்ச் ஆகியோரின் அதிரடி ஆட்டம் காரணமாக அவுஸ்திரேலியா அணி எந்த வித விக்கெட் இழப்பும் இன்றி வெற்றி பெற்றுள்ளது.

மும்பாய் வான்கடே மைதானத்தில் நேற்று ஆரம்பமான இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற அவுஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.



அதன்படி இந்திய அணியின் ரோகித் சர்மா, தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ரோகித் சர்மா 10 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து தவான் உடன் கேஎல் ராகுல் ஜோடி சேர்ந்தார்.இந்தியா பவர்பிளேயான முதல் 10 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 45 ரன்கள் எடுத்திருந்தது. தவான் 66 பந்தில் அரைசதம் அடித்தார். அணியின் ஸ்கோர் 27.1 ஓவரில் 134 ரன்னாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. கேஎல் ராகுல் 47 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் விளையாடிய தவான் 74 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது இந்தியா 28.5 ஓவரில் 140 ரன்கள் எடுத்திருந்தது.

அடுத்த வந்த விராட் கோலி 16 ரன்னிலும், ஷ்ரேயாஸ் அய்யர் 4 ரன்னிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தார். 30 ரன்னுக்குள் இந்தியா முக்கியமான நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. 6-வது விக்கெட்டுக்கு ரிஷப் பண்ட் உடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். அப்போது இந்தியா 32.5 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 164 ரன்கள் எடுத்திருந்தது.

ஆனால் அணியின் ஸ்கோர் 213 ரன்னாக இருக்கும்போது ஜடேஜா ஆட்டமிழந்தார். 25 ரன்னில் ஜடேஜா ஆட்டமிழந்த அடுத்த ஓவரில் ரிஷப் பண்ட் 28 ரன்னில் ஆட்டமிழந்தார். குல்தீப் யாதவ் 17 ரன்களும், முகமது ஷமி 10 ரன்களும் அடிக்க இந்தியா 49.1 ஓவரில் 255 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது.

அவுஸ்திரேலியா அணி சார்பில் மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்டும், பேட் கம்மின்ஸ் மற்றும் ரிச்சர்ட்சன் தலா இரண்டு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து 256 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலியா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்



களின் அதிரடி சதம் மூலம் 37.4 ஓவ ர்களில் எந்த விக்கெட் இழப்பும் இன்றி வெற்றி இலக்கை கடந்தது.

அவுஸ்திரேலியா அணி சார்பாக டேவிட் வோர்னர் 128 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஆரோன் பிஞ்ச் 110 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

எனவே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலியா அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.



## அவுஸ்திரேலியா காட்டுத் தீ; டென்னிஸில் ஏற்படுத்திய பாதிப்பு



அவுஸ்திரேலியாவில் புதர்கள் தீப்பற்றி எரிந்தது. தற்போது அது காட்டுத்தீயாக மாறியுள்ளது. காட்டுத்தீயால் மெல்போர்ன் நகரமே புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. வீரர்கள் தீயை அணைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இருந்தாலும் தீயின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடரின் முதன்மை சுற்றுக்கு முன்னேறுவதற்கான தகுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஸ்லோவேனியா வீராங்கனை டேலிலா ஜகுபோவிச் சுவிட்சர்லாந்தின் ஸ்டெஃபானியை எதிர்கொண்டார்.

முதல் செட்டை டேலிலா ஜகுபோவிச் 6-4 எனக் கைப்பற்றினார். 2-வது செட்டில் 5-6 என பின்தங்கிய நிலையில் காற்று மாசு காரணமாக இருமலால் அவதிப்பட்டு டென்னிஸ் கோர்ட்டில் நிலைகுலைந்தார்.

அவர் கைத்தாங்களாக கோர்ட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து அவதிப்பட்டதால் போட்டியில் இருந்து வெளியேறுவதாக தெரிவித்தார். இதனால் ஸ்டெஃபானி வெற்றி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் கனடாவைச் சேர்ந்த பவுச்சார்டு சீனாவின் யு சியாவோடியை எதிர்கொண்டார். இதில் பவுச்சார்டு இரண்டு செட்கள் முடிவில் 4-6, 7-6 என சமநிலையில் இருந்தபோது மார்பில் வலி இருப்பதாக தெரிவித்தார். இதனால் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

அதன்பின் வெற்றியை தீர்மானிக்கும் 3-வது செட்டை 6-1 எனக் கைப்பற்றி வெற்றி பெற்றார். நேற்று நடக்க இருந்த சில பயிற்சி ஆட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

## அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ள பிரபல வீரர்

தென்னாபிரிக்காவின் சுழற்பந்து வீச்சாளரும் சகலதுறை ஆட்டக்காரருமான ஜே.




பி. டுமினி கடந்த 2017 ஆம் ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

அதன்பின் கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்குப்பின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இந்நிலையில், 35 வயதாகும் டுமினி, இருபதுக்கு - 20 தொடரில் அதிக அளவில் விளையாடினார். இதையடுத்து அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

## மீண்டும் ரி-20 அணியில் சேர்க்கப்பட்டார் பிராவோ



அயர்லாந்து அணிக்கெதிரான ரி-20 தொடரில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க மேற்கிந்திய தீவுகள் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரன் பொலார்ட் தலைமையிலான இந்த அணியில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரரான டுவைன் பிராவோ சேர்க்கப்பட்டுள்ளார்.

பிராவோ, இறுதியாக 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 போட்டியில் விளையாடினார். அதன் பின் சர்வதேச போட்டிகளில் விளையாடவில்லை.

கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

எனினும், அவரது வெளிநாட்டு ரி-20 லீக் தொடரில் வெளிப்படுத்திய திறமையை கருத்திற் கொண்டு அவர் மீண்டும் அணிக்கு உள்வாங்குவது குறித்து சிரேஷ்ட வீரர்களுடன் கிரிக்கெட் சபை பேச்சுவார்த்தை நடத்தியது. அத்தோடு அவரும் இது குறித்து தீர யோசித்தார்.

இதன்பிறகு, அணியின் நலன் கருதியும், எதிர்வரும் ரி-20 உலகக்கிண்ண தொடரை எதிர்பார்த்தும், மீண்டும் ரி-20 அணிக்காக விளையாட சம்மதம் தெரிவித்தார்.

கிரன் பொலார்ட் தலைமையிலான அணியில், டுவைன் பிராவோ, செல்டோன் கொட்ரெல், சிம்ரொன் ஹெட்மியர், .பிரெணடன் கிங், எவீன் லிவீஸ், கெர்ரி பியர், நிக்கோலஸ் பூரான், ரொவ்மன் பவல், ஷெர்பேன் ருத்தர்போர்ட், லெண்ட்ல் சிமொன்ஸ், ஹெய்டன் வோல்ஷ், கெஸ்ரிக் வில்லியம்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அயர்லாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற ஒருநாள் தொடரை, மேற்கிந்திய தீவுகள் அணி 3-0 என முழுமையாக கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து தற்போது மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் போட்டி இன்று கிரெனடா மைதானத்தில் நடைபெறுகின்றது.



இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்
தேசத்தின் மகுடமான இலங்கை வங்கியின் நல்வாழ்த்துக்கள்.
www.boc.lk
தலைமைக் காரியாலயம், "இலங்கை வங்கி சதுக்கம்"
இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கல்



(குப்பிழான்)

யாழ்.வடமராட்சி கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட அறுபது குடும்பங்களுக்கு அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச் சங்கம் புதுப் பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொருட்களை வழங்கி வைத்துள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை முற்பகல் குடத்தனை வடக்கில் அமைந்துள்ள அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மருதங்கேணிப் பிரதேச செயலக அலுவலர்கள், குடத்தனை வடக்கு கிராம உத்தியோகத்தர், அகரம் உதவும் நலன்புரிச் சங்கத் தொண்டர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-18)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## குறியீடுகள் - ஓர் அறிமுகம்

யந்திரங்கள் எழுத்து வடிவமாகவும் சித்திர வடிவமாகவும் அமைந்துள்ளன. மந்திரங்கள் ஒலி வடிவமாக அமைந்துள்ளன. யந்திர வடிவங்களை தன்னுள் கிரகித்து வைக்கும் தன்மையுடையது வலது மூளையாகும். மந்திரங்களை உச்சரிக்க வைப்பது இடது மூளையாகும்.

அதாவது யந்திரங்கள் ஒலி வடிவமுடையவையாகும். மந்திரங்கள் ஒலி வடிவமுடையாகும். இதன் அடிப்படையில் தோன்றியதுதான் இந்த மதத்தில் காணப்படும் உருவ வழிபாடாகும். இந்து மதத்தினர் தெய்வ உருவங்களை சித்திரமாக வரைந்து அல்லது சிலையாக வடித்து வைத்திருக்கிறார்கள். அந்த உருவ அமைப்புகளை வார்த்தைகளால் வர்ணிப்பதே மந்திரமாகும்.அதாவது சித்திரங்களில் அல்லது சிலைகளில் காணப்படும் உருவ அமைப்பு யந்திரமாகவும் அந்த சித்திரங்கள் அல்லது சிலைகளின் வர்ணம் மந்திரமாகவும் கருதப்படுகிறது.

ஒவ்வொரு உருவ அமைப்பும் மனதில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. சிலை வழிபாட்டின் மூலம் தங்கள் விருப்பங்களை நிறைவேறுவதை அனுபவித்து அறிந்தவர்கள் இந்துக்கள்.

சில வழிபாடு மட்டுமல்லாது ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒரு குறியீட்டை பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். குறியீடுகள் அனைத்தும் ஒரு வகையான யந்திரங்களாகும். யந்திர பிரதிஷ்டையானது மனித உடலில் வலது மூளையிலும் மந்திர உச்சாடனம் இடது மூளையிலும் செய்யப்படுகிறது.

(தொடரும்...)

# செயற்பட்டு மகிழ்வோம்

(கொடிகாமம்)

வரணி வடக்கு அ.த.க. பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினரா்க யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

# சித்திரக் கண்காட்சி

(கொடிகாமம்)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் ஆறாவது நாத நர்த்தன வர்ணமும் சித்திரக் கண்காட்சியும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியளவில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக வடமாகாண அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா, கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றஜிதா ராகவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

# கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும், கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் க.தர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி இ.சிவமங்கையும், சிறப்பு விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.சுவீட்டா மற்றும் கோவிற்குடியிருப்பு முருகன்ஆலயத்தலைவர்ப.குகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் கடந்த வருடத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான பிரதேச மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் சனசமூக நிலையத்தின் 2020ஆம் ஆண்டிற்கான தலைவராக மீண்டும் க.தர்சன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக ந.கபிலனும், பொருளாளராக லத்தீபனும் தெரிவு செயய்பட்டனர். (ஜ-30)

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட்சம் குழுமத்துடன் யாழ். செயலமைப்பு கருகம்பனை இந்து இளைஞர் கழகம், சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலைய்ம் ஆகியன இணைந்து நடத்தும் பொங்கல் விழா இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இளவாலை உயரப்புலம் மைதானத்தில் யாழ்.செயலமைப்பு போசகர் இ.செல்வராசா தலைமையில் இடம்பெறும்.

இதில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா இராஜாராஜா ஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள், இளவாலை பங்குத் தந்தை அருட்பணி ம.யேசுரட்ணம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.ஜே.செனதீர, வலிகாமம் வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மேசி சேவியர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# தைப்பொங்கல் விசேட பஜனை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தின் தைப்பொங்கல் விசேட பஜனை நிகழ்வு இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 6 மணிவரை நிலையத்தில் இடம்பெறும். (இ-5)

# இராசி பலன்

**மீனம்** — தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**மேடம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நண்பர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்** — மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** — மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்** — கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்ள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்** — குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** — கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், குடும்ப ஒற்றுமை கூடும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — உறவினர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** — சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுகூலங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | | | |
| சூரி, புத | | | சந் |
| சனி, கேது, குரு | செவ் | | |

சந்திராஷ்டமம்
சதயம்

**15.01.2020**
தை 01, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 4.03 மணிவரை
பூரம் முற்பகல் 9.42 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
தைப்பொங்கல் திருநாள்
சிறு தீமைக்கு இடம் கொடுத்தால்
பெருந்தீமை புகுந்துவிடும்

வளவன்

# புலிகள் அமைப்பை தொடர்ந்தும் பயங்கரவாத அமைப்பாக பெயரிட்டது ஐரோப்பிய ஒன்றியம்

(பிரஸல்ஸ்)

**ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத அமைப்புக்களின் புதிய பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் உள்ளடக்கப்பட்டது.**

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புக்களைத் தடை செய்யப்பட்ட பயங்கரவாத பட்டியலாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடுவது வழக்கம்.

இந்நிலையில் இவ்வருடத்திற்கான பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், குறித்த பட்டியலில் குறிப்பிடப்பட்ட 21 பயங்கரவாத அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரும் ஒன்றாக இணைக்கப்பட்டது.

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் மௌனிக்கப்பட்டன.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து அதே ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் 1373/2001 தீர்மானத்தின் கீழ் குறித்த பட்டியல் முதன் முதலாக வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகளின் பயங்கரவாதம் தொடர்பான வழக்கமான தகவல் பரிமாற்றங்களின் அடிப்படையில் குறித்த பட்டியல் சீரான இடைவெளியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தால் பயங்கரவாத அமைப்பாக பெயரிடப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர் இம்முறை வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு பட்டியலில் இருந்து நீக்குமாறு பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டு இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தொடர்ந்தும் உள்ளடக்கியது.

இந்த விடயம் தென்னிந்திய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புலனாய்வு அதிகாரிகள் விடுவிக்கப்படவில்லை அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

34 புலனாய்வு அதிகாரிகள் விடுவிக்கப்பட்டுள்ளனரென வெளியாகிய செய்தியை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது, கடந்த பௌர்ணமி தினத்தன்று 34 புலனாய்வு அதிகாரிகள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனரென சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அரசியல் கைதிகள் குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர், அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பெயர் விபரங்கள் குறித்த தகவல்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவர்களில் பலரின் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் அவர்களின் விடுதலை தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடகக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

பூராயம் செயல் அமைப்பினரின் ஏற்பாட்டில் நாடகக் கொண்டாட்டம் இன்று உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தில் மாலை 5 மணியளவில் இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸின் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நாடகக் கொண்டாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் எழுத்துரு, நெறியாள்கையில் காலை ஏழு மணி காய்ச்சல் நேரம் நாடகமும், குழந்தை மா.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில், க.சத்தியசீலனின் நெறியாள்கையில் பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகமும், ஆசிரியர் கணேசராஜாவின் எழுத்துரு, நெறியாள்கையில் பச்சைமரமும் பட்டும் நாடகமும் ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டார் ரஞ்சன்

## செயலாளர் காரியவசம் அறிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் கட்சி உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்தத ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்தது.

அக் கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று செவ்வாய்க்கிழமை இதனைத் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த நான்காம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதன்போது பல இறுவெட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதனையடுத்து முன்னைய ஆட்சியின் போது குற்றப்புலனாய்வு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான குரல் பதிவுகள் அனைத்தும் பகிரங்கமாகியிருந்தன.

அதன் பின்னர் அவர் மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மேலும் பல தொலைபேசி குரல் பதிவுகளும் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


பழமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-8984)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தனை -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# தேசிய இலக்குகளை அடைவதற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்



## ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களால் கோலாகலமாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கலை கொண்டாடி மகிழும் இலங்கை தமிழ் சகோதர மக்களோடு நானும் இணைந்து கொள்கின்றேன். விவசாயத்தை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் இன்றைய நாளில் சூரிய பகவானை நோக்கி பக்தியுடன் வழிபாடாற்றி நன்றி செலுத்தி வாழ்வில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்றனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தைப்பொங்கல் கொண்டாட்டங்களினால் மக்கள் உருவாகும் புதிய பிணைப்புக்கள் குடும்ப அலகுகளி லிருந்து ஒட்டுமொத்த சமூகத்திற்கும் விரிவடைந்து செல்கின்றன. இதனூடாக பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கிடையிலும் ஆட்சியாளர்கள், தொண்டர்க ளுக்கிடையிலான மனித நேயமிக்க சமூக பிணைப்புக்கள் மென்மேலும் பலமடையும் என்பது நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் பண்டிகையின் குறிக்கோள்களை அடைவதற்கு முதலில் இலங்கையர்கள் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே அவற்றை நமது எண்ணங்களிலும் செயற்பாடுகளிலும் யதார்த்தமாக்குவதற்கு நாம் இந்த தைத்திரு நாளில் உறுதி கொள்வோம்.

ஒளியினால் இருள் விலகுவதைப் போன்று ஒற்றுமையினால் வேற்றுமை மறையும். அந்த அடிப்படையிலேயே இலங்கையர்கள் என்ற வகையில் நாம் சுபீட்சத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். தேசிய இலக்குகளை அடைவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதோடு அதற்காக பல்வேறு உலக நாடுகளில் வாழும் எமது நாட்டை சேர்ந்த அனைத்து சகோதர தமிழ் மக்களும் இலங்கையை தமது தாய்நாடாக கருதி செயற்பட வேண்டும் என நான் அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

தைப்பொங்கல் தின வழிபாட்டுக்குரிய சூரிய பகவான் நமது வாழ்விற்கு சக்தியையும் இருளை அகற்றும் ஒளி யையும் கொண்டு வருவதைப் போன்று உன்னத மானிட பண்புகளினால் அனைவரது வாழ்வும் வளம் பெற வேண்டுமென பிராாத்திக்கின்றேன் என அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




## இந்தியாவிற்கு போகப் போகின்றோம்; ஜனாதிபதியுடன் பேசப் போகின்றோம் என்று

# தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றுகிறது கூட்டமைப்பு

## சுரேஷ் கடும் காட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவுக்கு போகப்போகின்றோம். ஜனாதிபதியுடன் பேச இருக்கின்றோம், பிரதமருடன் பேச இருக்கின்றோம் என்று பல பொய்களைக் கூறி தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டினார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் டில்லிக்கு போக இருக்கின்றோம், நாங்கள் இந்திய அரசாங்கத்துடன் பேசப் போகின்றோம் என்று கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை டில்லிக்கு செல்லவும் இல்லை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவும் இல்லை. அதைவிட இன்னும் ஒரு கேவலம் இவர்களுக்கு கிடைத்துள்ளது ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை.

இன்றுவரை ஜனாதிபதியை பார்க்க முடியாத நிலையிலும், பிரதமரை சந்தித்துப் பேச முடியாத நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அலைந்து திரிகின்றனர். கூட்டமைப்பினர் கோரிக்கைக்கு மேல் கோரிக்கை வைக்கின்றார்கள். இன்றுவரை அவர்களைப் பார்ப்பதற்கு ஜனாதிபதி சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. இது இன்னொரு புறம் இருக்க, இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக இருந்தும் தமிழ் மக்களின் தலைவராக இருந்தும் கூட அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தற்பொழுது பொதுத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. தமிழ் மக்களின் வாக்குகளை வாங்க வேண்டும் என்பதற்காக பல பொய்களைக் கூறி, ஜனாதிபதியுடன் பேச இருக்கின்றோம். பிரதமருடன் பேச இருக்கின்றோம் என்று தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களை தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் நிராகரிக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து, தீர்வினைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றியவர்கள், தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசி தீர்வினைப் பெற்றுத்தருவதாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுக்கின்றார் பிரிந்து சென்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டுமென்று. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வதற்கு நாங்கள் காரணமல்ல, திறமையற்ற தலைமையே இதற்குக் காரணம். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கொழும்பில் படித்துக் கொண்டிருந்த சுமந்திரனுக்கு என்ன அரசியல் அனுபவம் இருக்கின்றது? இவருக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை என்னவென்று தெரியுமா? தற்போது அவர்களால் ஆரம்பித்த திட்டங்களுக்கு நிதி இல்லாத காரணத்தால் ஜனாதிபதி, பிரதமரை சந்திக்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆளுநரை சந்தித்து அந்த நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே முயன்று வருகின்றனர். போராட்டம் வெடிக்கும் என்று கூறி வந்த இவர்கள் வடக்கு பகுதியில் இடம்பெற்று வரும் எந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். இந்தப் போராட்டங்களில் தீர்வு கிடைக்கவில்லை என்றால் போராட்டம் வெடிக்கும் என்று இவர்கள் மக்களை உசுப்பேத்தி அரசியல் செய்தவர்களே தவிர கடந்தகால அரசாங்கத்தை இவர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இவர்களை நன்றாக பயன்படுத்திக் கொண்டது. எனவே நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். தமிழ் மக்கள் இவர்களை நிராகரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-101)

# வடக்கு மாகாண ஆளுநரின் பொங்கல் வாழ்த்துச்செய்தி



குளிரும் இருளும் மிகுந்த மார்கழி மாதத்துக்குப் பின்னர், புதிய முயற்சிகளைத் தொடங்கும் மங்கலம் மிகுந்த மாதமாக தை அமைகிறது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று மக்கள் நம்புகின்றார்கள்.

பொங்கல் மரபுவழி பயிர்ச் செய்கைக் காலத்தின் நிறைவைக் குறிப்பதாக அமைவது. விளைந்த நெல் வீட்டுக்குக் கொண்டு வந்து களஞ்சியப்படுத்தப்படும். புது நெல் பொங்கலுக்கு தயாராகிவிடும்.

தை மாதத்தில் இப்பொங்கல் நடைபெறுவதால் "தைப் பொங்கல்" எனப்படுகின்றது. தைப்பொங்கல் தமிழ் சமூகத்தின் பண்பாடு, நாகரிகத்தின் உயர் மதிப்பீடுகளை வெளிப்படுத்தும் ஒரு விழாவாகும். எங்களுக்கு ஏராளமான அறுவடையைத் தருவதற்குத் துணை செய்த சூரியனுக்கு நன்றி சொல்லுகின்ற புனிதமான நாளாகும்.

பயிர்ச்செய்கைச் சமூகம் பண்டைக்காலம் தொட்டே சூரியன் மேல் ஆழ்ந்த பக்தி உடையவர்களாயுள்ளனர். நல்ல விளைவினை ஒவ்வோராண்டும் தந்துதவும் சூரியனுக்கு புதிர் எடுத்துப் பொங்கல் செய்வதனூடாக இந்த மரபு உருவகப்படுத் தப்படுகிறது. இந்த நல்ல விளைச்சலுக்கு பங்களிக்கின்ற விலங்குகளும் இத் தைப்பொங்கல் நாளிலே நினைவு கூரப்படுகின்றன. இம்மரபுகள் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள நெருங்கிய பிணைப்பினை பொருளுள்ள முறையிலே வலுப்படுத்துகிறது.

மரபுநிலையில், தைப்பொங்கல் நான்கு நாட்கள் கொண்டாடப்படுகின்றன. தைப்பொங்கல் நாளின் முதல்நாள் தூய்மைப் படுத்தும் நாளாகும். பழையன கழிதலும் புதியவை புகுதலும் மரபாகும். பொங்கல் நாளன்று குடும்பத்தினர், நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து பொங்கலை ஆக்கி ஒன்றுகூடி உண்பார்கள்.

பயிர்ச்செய்கை, பண்ணை ஆகியவற்றிலே நெல், பண்ணைப் பொருட்கள், உரம் ஆகியனவற்றைத் தந்து, உழுவதற்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் உதவும் கால்நடைக்கு மூன்றாவது நாள் ஒதுக்கப்பட்டது. அவற்றினுடைய கடின உழைப்பு இந்த நாளிலே நினைவுகூரப்படுகிறது. நான்காவது நாள் "காணும் பொங்கல்" என்பர்.

அன்று குடும்ப உறவினர்கள், நண்பர்கள் வீட் டுக்குச் செல்வதும் பரிசுப் பொருட்கள் பரிமாறலும் இடம்பெறும். தைப் பொங்கல் விழாவினை இயற்கை நிலைகளாகிய சூரியன், பண்ணை விலங்குகள் ஆகியவை சிறந்த விளைவைத் தந்து துணை செய்தமையை நினைந்து கொண்டாடப்படுகிறது.

எங்களுக்கு உணவு உற்பத்தி செய்து தரும் பயிர்செய்வோருக்கு நன்றி கூறும் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. ஒட்டுமொத்தமாக, சமூக இணக்கத்தினை ஊக்குவிக்கவும் மக்களை ஒன்றாக இணைக்கும் ஒரு பொது நிகழ்வாகவும் இது கொண்டாடப்படுகிறது.

இத் தைப்பொங்கல் நாளிலே நட்பின் வலுவான பிணைப்புகள், ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ளல், நம்பிக்கை ஆகியன் எல்லா சமூகத்தினரிடையேயும் விளங்கவேண்டுமென இறை ஆசியை வேண்டிக்கொள்ளும் இந்நாள் வணக்கத் திலே நானும் இணைந்து கொள்கிறேன்! இத் தைப் பொங்கல் நாள் இயற்கையில் எங்களுக்கு இருக்கும் மதிப்பினை பிரதிபலிக்கவும் சம சமூகத்தின் கூட்டுறவினை பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்புள்ளதாக ஆக்க வேண்டுகின்றேன்.

**பி.எஸ்.எம்.சார்ள்ஸ்**
ஆளுநர், வடக்கு மாகாணம்.

# உலகத் தமிழ்க் கவிஞர்கள் நாள்

(யாழ்ப்பாணம்)

உலக தமிழ் கவிஞர் பேரமைப்பின் ஏற்பாட்டில் உலகத் தமிழ்க் கவிஞர் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பு, காலையடி - மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெறும். பல்வேறு கவிஞர்களின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந் நிகழ்வில் தமிழர் நலன், தமிழ்ச் சமூகம், திருக்குறள் சார்ந்த பொருள்களில் கவிதை அளிக்கைகள் இடம்பெறும். பங்குபற்ற விரும்பும் கவிஞர்கள் 0094771041945 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இவ் விழாவின் ஏற்பாட்டாளர் கவிஞர் அழ.பகீரதனுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 130 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 270 | 230 | 350 |
| தக்காளி | 300 | 400 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 100 |
| கோவா | 170 | 140 | 120 | 200 |
| கரட் | 350 | 500 | 300 | 500 |
| பூசணி | 80 | 60 | 60 | 100 |
| புடோல் | 150 | 140 | 130 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 240 | 500 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 110 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 300 | 240 | 250 | 240 |
| லீக்ஸ் | 350 | 360 | 200 | 400 |
| பீற்றூட் | 250 | 240 | 200 | 240 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 500 | 800 |
| போஞ்சி | 200 | 240 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 130 | 140 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 30 | 60 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 240 | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 60 | 110 | 80 |



# பண்ணை கடற்கரையில் மரநடுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரைப் பகுதியில் விசேட மரநடுகை ஒன்று கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. இம் மரநடுகை நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டு மரம் ஒன்றினை நாட்டினார். இந் நிகழ்வில் மாநகர ஆணையாளர், பொறியியலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஜ)

# வடக்கில் களைகட்டியது பொங்கல் வியாபாரம்





மன்னார்





முல்லைத்தீவு




வவுனியா

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகியுள்ள நிலையில் வடக்கில் பொங்கல் வியாபாரம் களைகட்டியிருந்தது.

இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி இருந்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (9-250-285)

# முல்லைத்தீவு வட்டுவாகலில் 9 மிதிவெடிகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்திற்கு அருகிலுள்ள வட்டுவாகல் ஆற்றங்கரை கடலினை அடையும் பகுதியினை அண்மித்த பகுதியில் இருந்து மிதிவெடிகள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் குறித்த மிதிவெடிகளை இனம்கண்டுள்ளார்கள். இதன்போது 9 மிதிவெடிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றை நீதிமன்ற உத்தரவு பெற்று அக ற்றும் நடவடிக்கையை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டனர். (9-281)

# பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் 27 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும் செயலாண்மைக்குழு உறுப்பினர் தெரிவும் பதவி ஆளணியினர் தெரிவும் நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டப வீதியில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (9-84)

# இலவச மருத்துவ முகாம்



(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு நெடுங்கேணி மகாவித்தியாலத்தில் இலவச கண்மருத்துவ முகாம் நேற்று இடம்பெற்றது.

வவுனியா ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் அதன் வவுனியா மாவட்ட தலைவரும் ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தருமான எஸ்.சிவகுமாரன் தலைமையில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மருத்துவ முகாமில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களான அருள்மொழி, மாதுரி, கிருபாகரன், செல்வ துஷ்யந், ராஜகருண, நிரோஷன் அல்விஸ், தனிகாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான சிகிச்சைகளை வழங்கியிருந்ததுடன், அவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (9-299)

# முல்லை. கடற்பரப்பில் வெளி மாவட்ட மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்துமாறு உள்ளூர் மீனவர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் சட்ட விரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுங்கள் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் ஞானதீபன் அன்ரனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் நிகழ்வில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் பருவ காலங்களில் அதிகரித்துள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் சட்டவிரோத தொழில்கள் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் கடற்றொழில் நடவடிக்கைகளினால் முல்லைத்தீவின் கடல் வளம் அழிவடைந்து வருகின்றன. பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் வருகைக்கு முல்லைத்தீவில் இருக்கின்ற பணபலம் படைத்த சிலரின் ஒத்துழைப்பும் முக்கியமாகவுள்ளது.

இதன் காரணமாகவே சட்ட விரோத தொழில் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், வடமாகாண கடற்றொழிலாளர்கள் இணையம் ஆகியன ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (9-350)

# பாடசாலை முன் பட்டாசு விற்பனை; வவுனியா நகரசபை நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பாதுகாப்பற்ற முறையில் பொங்கல் பட்டாசுகளை விற்பனை செய்யும் நடவடிக்கை வவுனியா நகர சபையின் தலையீட்டை அடுத்து அகற்றப்பட்டது.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று குறித்த பகுதியில் நபர் ஒருவர் பட்டாசுகளை விற்பனை செய்து கொண்டிருந்துள்ளார். இதனால் பட்டாசுகளை வாங்குவதற்காக அதிகளவான மாணவர்கள் பாடசாலை முடிவடைந்ததும் அவ்விடத்தில் குழுமியிருந்தனர்.

இதனை அவதானித்த வவுனியா சிரேஷ்ட சட்டத்தரணி இ.தயாபரன் பட்டாசு விற்பனை செய்யும் நபரிடம் சென்று இவ்விடத்தில் பட்டாசுகளை விற்பனை செய்வது மாணவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று தெரிவித்ததுடன் இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை தலைவருக்கும் தெரியப்படுத்தியிருந்தார். இந்நிலையில் நகரசபை தலைவரின் நடவடிக்கையை அடுத்து குறித்த விற்பனை நடவடிக்கை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. (9-299)

# பழைய மாணவர் ஒன்றுகூடல்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த பழைய மாணவர் ஒன்றுகூடலும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பழையமாணவர் சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (9-316)





## கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட

# பண்ணையாளர்கள் அனைவரும் இம்மாத இறுதிக்குள் பதிவுகளை மேற்கொண்டு அனுமதி பெற வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட சகல விலங்குப் பண்ணையாளர்களும் பிரதேச சபையின் அனுமதியைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் 23 ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கிளிநொச்சி சபைக்குட்பட்ட பிரதேசங்களில் விலங்கு வளர்ப்பில் ஈடுபட்டுவரும் விலங்கு பண்ணையாளர்கள் விலங்குகளை உரிய முறையில் பராமரிக்காததனால் சுற்றுச்சூழல் தொடர்பாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, பாதுகாப்பற்ற முறையிலான பன்றி வளர்ப்புக்களால் சுற்றுச் சூழல் மாசடைதல் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்காது வீதிகளில் விடுவதனால் இரவு வேளையில் கால்நடைகளால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு விலங்குப்பண்ணையாளர்கள் தமது வளர்ப்பு விலங்குகளை உரிய முறையில் பராமரிக்காததனால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை அமர்வில் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட சகல விலங்குப்பண்ணையாளர்களும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கரைச்சிப் பிரதேச சபையில் தமது பதிவுகளை மேற்கொண்டு அனுமதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதேவேளை குழாய் கிணறுகளை அமைப்பதற்கான அனுமதிகளை பெறவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார். (9-315)

# 24 போத்தல்கள் கசிப்புடன் தருமபுரத்தில் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் 24 போத்தல்களுடன் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டதுடன் ஒருவர் தப்பியோடியுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி குற்றத்தடுப்புப்பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை புளியம்பொக்கணை நாகேந்திரபுரம், தருமபுரம் ஆகிய பகுதிகளில் பொலிஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

அப்போது 24 போத்தல் கசிப்புடன் ஆண், பெண் இருவர் கைது செய்யப்பட்டதுடன் மேலும் ஒருவர் தப்பியோடியுள்ளார். கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-316)

# துப்பாக்கிச் சூட்டில் மகள் பலி!

## தாய் படுகாயம்

(வரக்காபொல)

வரக்காபொல- தொரவக்க பகுதியில் இனந்தெரியாத ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 22 வயதுடைய யுவதியொருவரே உயிரிழந்தார்.

தாய் மற்றும் மகள் மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்தது.

மேலும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்த தாய், வரக்காபொல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)

# விக்னேஸ்வரன்-ஆவல் கணேசன் சந்திப்பு



(சென்னை)


தமிழ்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டு சென்னையில் தங்கியிருந்த வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை ஈழ ஆதரவாளரான பழ.நெடுமாறனின் சார்பில் அவரது கட்சியின் பொதுச்செயலாளர் ஆவல் கணேசன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினார்.(இ-7)

# அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## அங்கஜன் எம்.பி.கள ஆய்வில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"நிறைவான கிராமம்" (சப்ரி கம) எனும் தொனிப் பொருளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் சகல கிராமங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காகவும் முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றி கள பரிசீலனை செய்வதற்காகவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கடந்த 11 ஆம் திகதி விஜயம் மேற்கொண்டார்.



இவ்விஜயத்தின் போது யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் சுப்பிரமணியம் சிவகுமாரன், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

சுகாதார சீர்கேடே பெரும் அவஸ்தையாக காணப்படுகின்ற யாழ்ப்பாணத்தில், பொதுமக்களின் பெரும் பிரச்சினையாக காணப்படுவது நீர் வழிந்தோடுவதற்கு கால்வாய்கள் இல்லாமையும் கால்வாய்களும் புனரமைப்பு அற்ற நிலைமை மற்றும் உரிய தரப்பினரால் தூர்வாராத கால்வாய்களேயாகும்.

இவ் விஜயத்தின் போது அப்பகுதி மக்களிடம் இத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றியும் அதன் தேவைப்பாட்டின் முக்கியத்துவத்தையும் அக்கிராம மக்களிடமே அவர் கேட்டறிந்தார்.

வாய்க்கால் மீள் புனரமைப்பு, வீதிகள் புனரமைப்பு, பாடசாலைகளுக்கான வேலைத் திட்டங்கள் மற்றும் கிராமிய வாழ்வாதார தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைத்தல் போன்ற பல திட்டங்கள் அங்கஜனிடம் மக்களால் முன்மொழியப்பட்டது.

சிறந்த மற்றும் மக்களுக்கு மிக தேவையான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என அங்கஜன் மக்களுக்கு நேரடியாக உறுதியளித்தார். (ஜ-10)

# தேள்களை கடத்திய சீனப்பிரஜை விமான நிலையத்தில் கைதானார்



(கொழும்பு)

தேள்களை உயிருடன் கடத்த முயன்ற சீனப் பிரஜையொருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

சுமார் 200 தேள்களை கடத்த முற்பட்டபோதே விமான நிலைய சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சீனப் பிரஜை 30 வயதுடையவரெனவும் அவர் பல்வேறு விலங்குகளை இவ்வாறு சீனாவுக்கு கடத்திச்செல்பவரெனவும் அவர் விலங்குகளை வளர்ப்பவரெனவும் அத்தோடு அவற்றை சந்தைப்படுத்துபவராகவும் உள்ளாரென விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

சீனாவுக்குச் செல்வதற்காக விமான நிலையத்திற்கு வந்த குறித்த நபரின் பயணப்பையை விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்ட போது குறித்த பையில் மறைக்கப்பட்ட நிலையில் 200 தேள்கள் மீட்கப்பட்டன.(இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வறுமையின் விலை!

ஒரு ஊரிலே இமாம் ஒருவர் இருந்தார். அவர் துணி வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். பல வெளியூர்களிலேயிருந்தெல்லாம் புதுத்துணி வகைகள் அவர் கடைக்கு வரும்.

புதுப்புது ரகம் எல்லாம் வரவழைப்பார். விற்பனை செய்வார். இது அவருடைய தொழில். ஒரு நாள் அவர் கடைக்கு ஒரு வயதான அம்மா வந்தார். ஒரு பழைய பட்டுச் சேலையை எடுத்துக் கொண்டு வந்தார். மிகவும் பழசு!

அதை அந்த இமாமிடம் காட்டி, ''ஐயா...இந்தப் பழைய சேலையை நீங்கள் விலைக்கு வாங்கிக் கொள்ள முடியுமா?'' என்று கேட்டார்.

அந்தக் கடையிலே வேலை செய்யும் ஊழியர் அதை வேடிக்கையாகப் பார்த்தார்... ''இந்த அம்மா விபரம் தெரியாமல் இப்படி இங்கே வந்து கேட்கிறாரே!'' என்று!

ஆமாம்! புதுப் புடவை வியாபாரம் செய்பவர்கள் யாராவது பழைய புடவையை விலைக்கு வாங்குவார்களா? அதுதான் அப்படி வேடிக்கையாகப் பார்த்தார். சரி... இமாம் என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்று அவரையே கவனித்தார்.

இமாம் அந்த மூதாட்டியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். பின்னர் கேட்டார்... "அம்மா... இதற்கு எவ்வளவு தொகை வேண்டும்?'' என்று. "இதற்கு நூற்று இருபது ரூபா வேண்டும்!'' என்றார் அந்த அம்மா.

இதைக் கேட்ட இமாம் லேசாகச் சிரித்துக் கொண்டே தன்னுடைய ஊழியரைப் பார்த்தார். ''இந்த அம்மாவுக்கு 400 ரூபா கொடுத்தனுப்பு!'' என்றார்.

அந்தப் பணியாளருக்கு மிகவும் ஆச்சரியம். என்ன இது... அந்த அம்மா... பழைய புடவையைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 120 ரூபா வேண்டும் என்று கேட்கிறார்... இவர் 400 ரூபா கொடுத்து அனுப்பு என்கிறார். ஒன்றும் புரியவில்லை என்று யோசித்துக் கொண்டே என்ன சொன்னீர்கள் என்பது போல் மறுபடியும் இமாமைப் பார்த்தார்.

"ஆமாம்! அவருக்கு 400 ரூபா கொடுத்து அனுப்பு!'' என்கிறார் அவர். இவர் மெதுவாகக் கேட்கிறார். "ஏன் இதற்கு இவ்வளவு அதிக விலை கொடுக்க வேண்டும்?'' என்றார் அந்தப் பழைய புடவையைப் பார்த்துக் கொண்டே! இப்பொழுது அந்த இமாம் சொல்கிறார்.

"பேசாமல் நான் சொன்னபடி போய் செய். நீ அந்தத் துணியைப் பார்க்கிறாய்! நான் அந்த ஏழையின் வறுமையைப் பார்க்கிறேன்!'' என்றார். பின்னர் அந்த ஊழியர் மறுவார்த்தை பேசவில்லை.

பணத்தைக் கொண்டு வந்து அந்த அம்மாவிடம் கொடுத்து விட்டார். அந்த அம்மா மனது நிறைந்தது! வறுமைக்கு விலை ஏது? அது எல்லோருக்கும் புரியாது! பெரியவர்களுக்குத்தான் புரியும். அது புரிந்ததனாலேதான் அந்தப் பெரியவர் அப்படி நடந்து கொண்டார்.

நற்பண்புகள் யாவை? அப்படி என்று நபிகள் நாயகமிடம் கேட்டார்களாம். அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

ஒற்றுமையோடு இருப்பது, நல்ல காரியங்களைச் செய்வது, தர்மம் புரிவது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளியைச் சென்று காண்பது, நல்லவரா? கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது, முஸ்லிமா? முஸ்லிம் அல்லாதவரா? என்று பாராமல் அயலவருடன் அன்புடன் நடந்து கொள்வது, முதியவர்களுக்கு மரியாதை செய்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது, உறவினர்களுடன் அன்பாக நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது, இதெல்லாம் தான் நற்பண்புகள் என்றார் நபிகள் நாயகம்.

இப்படிப்பட்ட நற்பண்புகளிலே ஒன்றுதான் அந்த இமாம் அந்த மூதாட்டிக்குச் செய்த உதவி. நமக்கு வேண்டப்பட்டவர்களிலே இப்படிப்பட்ட பண்பாளர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது!

நமக்கு வேண்டிய ஒரு கடைக்காரர்...அவர் கடையிலே இல்லாத நேரம் பார்த்து ஒரு ஆள் வந்தான்...வேலைக்காரப் பையனைப் பார்த்து... ஒரு கோழி இருக்கிறது விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்டிருக்கிறான். எவ்வளவு என்று கேட்டிருக்கிறான் அவன். பத்து ரூபா தான் என்றான் அவன்.

விலை மிகவும் ''சீப்பாக'' இருக்கிறது என்று நினைத்துக் கொண்டே ''சரி கோழியைக் கொடு'' என்றிருக்கிறான். அவன் உடனே பேப்பரைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறான். அவன் "கோழி எங்கே'' என்றான்.

இவன் ''அது அந்தப் பேப்பரிலே போட்டிருக்கிறது பார்!'' என்றான். அவன் பார்த்தான். அதிலே கோழிப் படம் போட்டிருக்கு! ''சரி... இந்தா பத்து ரூபாய்'' என்று ஒரு சீட்டைக் கொடுத்தான். இவன் அதை வாங்கிப் பார்த்தான். பார்த்தால் அதிலே பத்து ரூபாய் என்று எழுதியிருந்தது. பேசாமல் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

இது நடந்து கொஞ்ச நேரம் கழித்து அந்தக் கடை முதலாளி திரும்பி வந்தார். கடையிலே இருந்த பையன் நடந்த விபரத்தைச் சொன்னான். கடைசியிலே நானும் ஒரு சீட்டிலே பத்து ரூபா என்று எழுதிக் கொடுத்து அனுப்பிவிட்டேன் என்றான்.

இதைக் கேட்டதும் அந்தக் கடைக்காரர் பளார் என்று அறைந்து விட்டார் அந்தப் பையனை! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை... ''நான் என்ன தப்புச் செய்தேன் முதலாளி?'' என்றான். ''பத்து ரூபாய் என்று ஏன்டா சீட்டிலே எழுதிக் கொடுத்தாய். இப்போது சீட்டு வேஸ்ட் தானே... அதை வாயாலேயே சொல்லியிருக்கலாமேடா...'' என்றார்.

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020

## சூரிய பகவானே பொங்கல் பானை பொங்கி வழிவது போல் எங்கள் வாழ்வு பொங்கிட அருள்தா

கதிரவன் என்பவன் உலகத்தின் அடிப்படை இயக்க ஆற்றலாக இருக்கிறான். ஒரு பிண்டம் (உடம்பு) இயங்க வேண்டுமானால் வெப்ப ஆற்றல் தேவை. ஓர் அண்டம் (உலகம்) இயங்க வேண்டுமானால் கதிரவ ஆற்றல் தேவை. கதிரவன் இன்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது. கல்தேரின் வேறு எந்தப் பாகத்திலும் கதிரவர்களை வைக்காமல், சக்கரத்தில் ஆரக்கால்களாகக் கதிரவ மூர்த்திகளை வைத்ததன் நோக்கமே, உலகங்களின் இயக்கத்துக்குக் காரணியாகக் கதிரவன் இருக்கிறான் என்பதுதான். எனவேதான் நமது பண்பாட்டில் கதிரவ வழிபாட்டுக்கு மிக உன்னதமான இடத்தை வைத்திருக்கிறோம்.

பொங்கல் பண்டிகை என்பது நமது மரபில் பண்பாட்டு அடையாளமாக, வாழ்க்கை முறையில் ஆழ வேரூன்றிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. நாம் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதன் அடையாளமாக பொங்கல் கொண்டாட்டங்கள் அமைகின்றன. நம்முடைய வாழ்வில் உழவுத்தொழில் சிறந்து விளங்குகிறது. அதைச் சார்ந்த மற்ற தொழில்களும் சிறந்து விளங்குகின்றன, நமது குடும்பங்களில் ஆடு, மாடுகள் உள்ளிட்ட ஆநிரைச் செல்வங்கள் நிறைந்திருக்கின்றன என்பதையெல்லாம் பறைசாற்றும் திருவிழாவாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இவை அனைத்துக்கும் அவசியத் தேவையாக இருந்து அவற்றைத் தடையின்றி இயக்கும் கதிரவ மூர்த்திக்கு நன்றி சொல்லும் விழாவாகவும் பொங்கல் பண்டிகை இருக்கிறது. வீடுகளில் சூரியஒளி வந்து நிறையும் முற்றங்களில் வைக்கப்படும் பொங்கல் படையலின் ஒவ்வொரு செயலிலும் கதிரவ வழிபாடு மறைந்திருக்கிறது.

மண்பாண்டங்களில் பொங்கல் வைக்கப்படுகிறது. அந்த மண்பாண்டம் என்பது மண்ணால் செய்யப்பட்டு, நெருப்பில் சுடப்படுவது. மண் பானைகளின் உடம்பில் சுண்ணாம்பினால் சூரிய, சந்திர உருவங்கள் வரையப்படுகின்றன. சுண்ணாம்பு என்கிற பொருள் உள்ளுக்குள் நெருப்பு மிகுந்த பொருள் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

அந்த மண் பாண்டத்தை அடுப்பில் வைத்த பிறகு, அடுப்புக்கான நெருப்பு கற்பூரத்தால் ஏற்றப்படுகிறது.

பொங்கல் பானைகளின் கழுத்தில் சுற்றப்படும் இஞ்சிக் கொத்துகள், மஞ்சள் கொத்துகள் ஆகியவை தாவரவியல் ரீதியில் வெப்பத்தை முக்கிய கூறாகக் கொண்டவை. ஒன்று, வெப்பம் மிகுந்ததால் விளைந்த தாவரம். இன்னொன்று வெப்பம் குறைந்ததால் விளைந்த தாவரம். 'கதிரவ மூர்த்தியே, எமக்கு நீ மிகுந்தாலும் நன்மை செய்கிறாய், குறைந்தாலும் நன்மை செய்கிறாய். உனக்கு எம் வந்தனங்கள்' என்பதைச் சொல்லாமல் சொல்வதே பொங்கல் பானைகளில் இஞ்சிக் கொத்துகள், மஞ்சள் கொத்துகள் கட்டுவதன் காரணம்.

பொங்கல் பண்டிகையின் போது வீடுகளில் கட்டப்படும் தோரணங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பூக்கள், தாவரங்களைக் கொண்டு வீடுகளை அலங்கரிப்பது வழக்கம்.

பொதுவாக அனைத்து இடங்களிலும் கிடைக்கும் பூக்களாக, பெரும்பாலான பகுதிகளில் அலங்கரிக்கப் பயன்படுத்தப்படும் பூக்களாக ஆவாரம் பூக்களும், சிறுபீழைப் பூக்களும் இருக்கின்றன. இஞ்சிக் கொத்துகள், மஞ்சள் கொத்துகளைப் போலவே இவ்விரு பூக்களும் வெப்பத்தைப் பெருக்கி, குறுக்கி, தனக்குள் பொதித்து வைத்திருப்பதால் கதிரவ வழிபாட்டில் முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றன.

பொங்கலின் அடையாளங்களாக இருக்கும் கரும்பு, வெல்லம், வாழைப்பழம், தேங்காய், பச்சரிசி போன்றவையும் வெப்பத்தை முக்கிய உறுப்புகளாகக் கொண்டவைதாம்.

பொங்கல் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என்று ஆனந்தக் குரலில் ஆரவாரமிட்டு குதூகலிக்கிறோம்.

பொங்கல் பொங்குவது என்பதே வெப்பத்தின் மிகுதியால்தான். 'கதிரவனே, உன்னுடைய வெப்பம் மிகுந்ததனால், பானையில் உள்ள இனிப்புப் பொங்கல் பொங்கி வழிகிறது. அதைப் போலவே எங்களுடைய வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சி பொங்க வேண்டும்' என்பதாகத்தான் 'பொங்கலோ பொங்கல்' என்ற குரலும் குலவைச் சத்தமும் ஓங்கி ஒலிக்கின்றன.

கதிரவன் தனது வெப்ப சேவையில் உச்சத்தைப் பெறும் முதல் ஆறு மாதங்கள் 'உத்தராயணம்' என்றும், சாந்தத்தைப் பெறும் அடுத்த ஆறு மாதங்கள் 'தட்சிணாயணம்' என்றும் அழைக்கப்படுகின்றன.

உத்தராயணத்தில் கதிரவனின் பார்வை உக்கிரம் வடக்கு நோக்கியும், தட்சிணாயணத்தில் தெற்கு நோக்கியும் இருக்கும் என்றும் கோளியல் அறிஞர்கள் சொல்வதுண்டு.

அத்தகைய உத்தராயணம் தொடங்கும் நாளும், தட்சிணாயணம் முடியும் நாளும் பொங்கல் பண்டிகையே ஆகும்.

கதிரவ மூர்த்திக்கு நம்முடைய கடந்த காலவாழ்க்கையின் மகிழ்ச்சிக்காக நன்றி சொல்லவும், எதிர்கால வாழ்க்கைக்கான வேண்டுதல்களை முன்வைக்கவும், எல்லோருக்குமான நல்வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்ளவும் பொங்கல் பண்டிகையின் கொண்டாட்டம் காரணம் அமைகிறது.




தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.

தமிழர் திருநாள்...தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் எனக் கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள்.

தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேடமாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை எமது நாட்டிலும் தமிழ்நாடு, மலேசியா, கனடா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளிலும் கூட விமர்சையாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3 ஆவது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகிப்பண்டிகையன்று, அதிகாலையில், அனைவரும் எழுந்து குளித்து, வீட்டில் உள்ள தேவையற்ற, பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள்.

அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

2 ஆவது நாளான பொங்கல், விசேடமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும் போது குலவையிட்டும், பொங்கலோ பொங்கல், பொங்கும் மங்கலம் எங்கும்தங்குக என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

3 ஆவது நாள் விழா மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கல் விமர்சையாக கொண்டாடப்படும். வீடுகள் புதுப் பூச்சு காணும். மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூசி, நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து, மாட்டுப் பொங்கல் தினத்தின் போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள்.

பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல்தான்.

இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. கரும்புகளுக்கு பொங்கல் பண்டிகையின்போதுதான் நல்ல கிராக்கி. இன்று முழுவதும் கரும்பு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள்.

அதேபோல பொங்கல் பண்டிகையின்போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேடமானவை. தமிழ்நாட்டில் அலங்கா நல்லூர், பாலமேடு, காஞ்சரம் பேட்டை ஆகியவை ஜல்லிக் கட்டுக்கு பெயர் போனவை.

இதில் அலங்காநல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும்.

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020



## யாழ்.ஆயரின் பொங்கல் தின வாழ்த்துச் செய்தி

தமிழ் மக்களின் நன்றிப் பெருவிழாவான பொங்கல் பெருவிழா உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் வேளை அனைவருக்கும் 2020ஆம் ஆண்டிற்குரிய பொங்கல் தின விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. இறைவன் தரும் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் என்றும் நன்றி கூற அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. நிலத்தை போற்றி பேண அழைப்பு விடுக்கும் விழா. நிலத்தை மாசுபடுத்தல், அழித்து அதன் செழிப்பை குறைத்தல் என்பவற்றை நிறுத்தி பாதுகாக்க அழைப்பு விடுக்கும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

பொங்குக நன்றியால் பொங்குக - இறைவன் அளித்த தரையை எண்ணி - தரையளித்த விளைவை எண்ணி - பொங்குக நன்றியால் பொங்குக என இந்த விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம்.

30 ஆண்டுகால கொடிய போர் முடிந்த நிலையில் எமது வாழ்வை திரும்ப அமைக்கும் பொறுப்பு எம் கைகளிலேயே உள்ளது. இலங்கை நாட்டின் புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் வெளிப்படுத்திய ஒற்றுமையான ஒட்டுமொத்த முடிவு ஒரு பெரும் வெற்றியாகும். இந்த ஒற்றுமையின் பலம் நாம் எதிர்கொள்ளவுள்ள பொதுத் தேர்தலிலும் காட்டப்பட வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒன்றித்து நின்றால் எதையும் சாதிக்க முடியும்.

அடுத்த தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் நிலையில் நம்பிக்கையோடு சரியான தெரிவுகளை மேற்கொண்டு எம் நாட்டை கட்டியெழுப்ப உழைப்பதும் செபிப்பதும் எமது கடமையாகும். வடமாகாணத்தின் முதல் பெண் ஆளுநராக நியமிக் கப்பட்ட தமிழரான பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை அன்புடன் மகிழ்வோடு வரவேற்கிறோம். அவரின் ஆளுமையில் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ். ஆயர்**



## யாழ். மாநகர முதல்வரின் பொங்கல் வாழ்த்துச் செய்தி

தைப்பொங்கல் தமிழர்களின் பொது நன்னாள். ஆதவனுக்கு நன்றி செலுத்தும் அர்ப்பணிப்புக்கு உரிய நாள். இன்றைய கால கட்டத்தில் சமய வேறுபாடற்று பொதுப்பண்டிகையாக உலகிற்கு உணவு தரும் உழவர் திருநாள் என அனைவரும் இந்நன்னாளை வரவேற்கின்றனர். கொண்டாடுகின்றனர்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பர். தை ஆரம்பத்திலிருந்து நற்காரியங்களை நம்மவர் மேற கொண்டு வருவது வழமையாய் தொன்று தொட்டு இருந்து வரும் பாரம்பரியமாகும். இதனாலே தான் தைமாதத்தின் மகத்துவமும் தைப்பொங்கலின் சிறப்பும் எமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

துன்பங்கள் தொலைத்து மக்கள் மத்தியில் இன்பமே விளங்கட்டும். இதுவே எனது இதய பூர்வமான பொங்கல் வாழ்த்தாகும்.

**பொங்கலோ! பொங்கல்!**
**பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.**
**இத்தைத்திருநாளில் இன்பமே சூழ்க!**
**எல்லோரும் வாழ்க!**

**இம்மானுவல் ஆனல்ட்**
**யாழ். மாநகர முதல்வர்,**



## தென்கைலை ஆதீனத்தின் பொங்கல் வாழ்த்து செய்தி

தை பிறந்தால் வழி பிறக்கும் எனும் முது மொழிக்கு பிறக்கின்ற தை எமது மனங்களில் உண்மையான அன்பையும் சமத்துவத்துவத்தையும் மகிழ்வையும் கொண்டு வரட்டும். உலக சக்தி முதலாகவும் உழவின் உற்பத்தி கர்த்தாவாகவும் உள்ள சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் திருநாளான தைப்பொங்கல் தமிழர்களுடைய உன்னத பண்பை எடுத்தியம்பும் இனிய பண்டிகை ஆகும். உலக ஒழுக்கில் 2020 பிறந்திருக்கின்ற தருணம் அதற்கு இணையாக தமிழர் ஆண்டான திருவள்ளுவர் ஆண்டு 2051ஆம் ஆண்டில் தைத்திங்கள் பிறக்கின்றது. நாம் அனைவரும் இணைந்து உழவுத் தொழிலை முன்னெடுப்பது போன்று நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வோடு எம்மிடையே எந்த ஏற்றத்தாழ்வுகளுக்கும் இடம் கொடாமல் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற சைவத் தமிழ் மகா மந்திரமான திருமந்திரத்திற்கு உயிர் கொடுக்க எல்லாத் தளங்களிலும் முன்வருவோம்.

சூரியனை மட்டுமன்றி பசு காளை இனங்களிற்கும் நன்றி தெரிவித்து பொங்கலிடும் நாம் அவற்றிற்கு மிகப் பெரும் வேதனையை அளிக்கும் குறி சுடுதல், நலமடித்தல் போன்ற செயற்பாடுகளை தாய்த் தமிழகம் போன்று இங்கும் கைவிடுவோம்.

நாம் அனைவரும் அன்பே சிவம் என்பதன் தாற்பரியம் உணர்ந்து அனைவரும் இன்புற்று வாழும் வண்ணம் எம் செயற்பாடுகளை முன்னெடுக்க இத்தைத் திருநாளில் உறுதி ஏற்போம். அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களை நல்கி இறை சிவன் நல்க திருக்கைலாய மரபு தென்கைலை ஆதீனம் சார்பாக பிரார்த்தித்து அமைகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

**தென்கைலை ஆதீன**
**தவத்திரு அகத்தியர் அடிகளார்.**



## செஞ்சொற்செல்வரின் பொங்கல் வாழ்த்துச் செய்தி

இயற்கைக் கடவுளாகிய சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் திருநாளே தைப் பொங்கல். சூரியவழிபாடு இந்துமக்களின் பாரம்பரிய வழிபாடு. எம் முன்னோர்கள் கண்கண்ட கடவுளாக கதிரவனைப் போற்றி தைத்திங்கள் நாளில் பொங்கிப் படைப்பார்கள். உழுதுண்டு வாழும் உழவர் பெருமக்களை வாழ்த்தும் திருநாளாக தைப்பொங்கல் நாளை எம் முன்னோர் கருதினார்கள். எனவே, இத் திருநாளில் அனைவரும் அதிகாலை எழுந்து இல்லத்தில் பொங்கி இறைவழிபாடு செய்யுங்கள்.

எங்கள் மண்ணில் ஒவ்வொரு தைப்பொங்கல் நாளிலும் எப்போது விடியும் என நாம் கேள்வி எழுப்பியவாறு காத்திருக்கின்றோம். என்றோ ஒருநாள் விடியும் என்பது உண்மை. சத்தியத்தின் வடிவமாக விளங்கும் தெய்வமான சூரியபகவானிடம் அனைவரும் விடிவுகேட்டு முறையிடுவோம். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது உண்மை. நல்ல காரியங்களை திட்டமிட்டு செய்பவர்கள் தோற்றுப்போவதில்லை. எனவே தைமாதத்தோடு அனைவரும் நல்ல காரியங்களை திட்டமிடுங்கள். அக்காரியங்களை வெற்றியாக்குவதற்கு வியர்வை சிந்தி உழைப்பதற்கு தயாராகுங்கள்.

'பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா' என்ற கவிமணியின் வார்த்தைகள் மிகவும் உன்னதமானவை. சோம்பலை தவிருங்கள், அனைவரும் முயற்சியாளர்களாக மாறுங்கள், முயற்சி வெற்றிதரும். தைத்திருநாளிலே நாம் நல்லதை சாதிப்பதற்கு ஆயத்தமாவோம். தமிழ் மக்களின் தலைவர்களே, கோபங்களை இறக்கி வையுங்கள், ஒன்றுபட்டு நில்லுங்கள். தர்ம வழியில் அனைவரையும் அரவணைத்துக் கொள்ளுங்கள். சத்தியவழியில், சமாதான வழியில் மக்களை காப்பதற்கு முன்வாருங்கள்.

தைத்திங்கள் திருநாளில் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**



## உலகில் அழியாச் செல்வமாய் நிலைத்து நிற்பது அறமும் தர்மமுமாகும்

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சோதனைகளும் வேதனைகளும் உயர்வுகளும் ஏமாற்றங்களும் நிறைந்ததாகக் காணப்படும். வாழ்க்கையில் துன்பம் நேரும் போதெல்லாம் மனிதர்களாகிய நாம் துவழ்ந்து போகின்றோம். ஆனால் வாழ்வில் துன்பம் நேரும் போது மனிதர்களை எம்மவர்களை இறைசக்தி காத்து வருகின்றது. மனிதர்கள் சாதாரண கருவிகள் மாத்திரமே என்று நினைத்தால் நேரும் துன்பங்களும் கணப்பொழுதில் விலகிவிடும். நம்மைச் சுற்றி தீய மனிதர்கள் பலர் இருந்தாலும் அவர்களால் உண்டாகும் தீமைகளுக்கு நாம் பலியாகாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். வாழ்வியல் நடைமுறையில் பந்தபாசங்களுக்கு முழுமையாக அடிமைப்பட்டிருந்தால் மனிதன் ஒரு நிமிடம் கூட நிம்மதி இன்றி வாழ வேரிடும். எனவே தாமரை இலை நீர் போல வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுலகில் எமக்கு மகிழ்வைத் தருவது இறை இன்பமே. மகிழ்வான நாளும் தைப்பொங்கல் நாளே. தைப்பொங்கல் தை 01 தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் தனிப்பெரும் விழா. தமிழர் திருநாளாக தமிழ் மக்கள் வாழும் சைவ பூமிகளிலும் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்கா, தென்னாபிரிக்கா, மொரிசியஸ் என தமிழ் தமிழர் பரந்து வாழும் அனைத்து நாடுகளிலும் தமிழர்களால் கொண்டாடப்படுகின்றது. பொங்கல் உழைக்கும் மக்கள் இயற்கைக்கும் ஏனைய உயிர்களுக்கும் சொல்லும் நன்றியாகும். மங்கல தோரணங்கள் கட்டி புது அரிசியில் பொங்கல் பொங்கி கரும்பு உண்டு கொண்டாடும் பொங்கல் விழா. பொங்கல் விழா அனைவருக்கும் இனிமையானதாக அமையட்டும். அறங்கள் செய்து தர்மங்கள் செய்து அனைவர் மனதையும் மகிழ்வடையச் செய்வோம். பொங்கல் மங்கலங்களைத் தரட்டும்.

**கலாநிதி பண்டிதர்**
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
**தலைவர் இந்து குருமார் ஒன்றியம்,**
**யாழ்ப்பாணம்.**



## மாவை.எம்.பியின் தைப்பொங்கல் வாழ்த்து

'வரப்புயர நீர் உயரும். நீருயர நெல் உயரம் நெல் உயர குடி உயரும் குடி உயர கோன் உயர்வான் என்பது ஆன்றோர் முது மொழி.

சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாய் மேலெழுந்து பரவி பருவப் பெயர்ச்சியின் போது மழை யாய் பெய்கிறது. இக்காலத்தில் மழை வீழ்ச்சி பெருகும். வேளாண் மக்கள் நெல் விதைப்பதற்காய் வயல் நிலங்களில் வரம்பு கட்டி மழை வளம் சேர்ப்பர். இதுதான் வரப்புயர நீர் உயர நெல்லுயர குடியுயர ஈற்றில் நாட்டு மன்னன் ஆட்சி ஓங்கும். குடிமக்கள் குதூகலித்து மகிழ்வர். வாழ்வும் வளமும் பெறுவர்.

பண்டைத் தமிழர் பாரம்பரியத்தில் வேளாண்மக்கள் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் உள்ளங்கொண்ட இயல்பும் அதனால் உவகையும் பண்பாடுங் கொண்ட மாண்புடை நாகரிகம் கொண்டவர்கள். இதனால் சூரியனுக்கு பொங்கல் முதல்நாள் நன்றி தெரிவிக்கின்றனர்.

தைத்திங்களில் இல்லங்களிலும், கோவில்களிலும் தெய்வம்தொழுது நெருப்பூட்டி, புதுப்பானையில் நீர் நிறைத்து கொதிநீர் கொள்ளப் புத்தரிசியும், பாலும் கரும்புச் சாறும், முந்திரி பருப்பு வகையும், வாசனைத் திரவியங்களும் கலந்து பொங்கல் செய்து சூரியன் எழுந்து வரும் கிழக்கு நோக்கி வணங்கி பொங்கல் படைத்து மக்கள் தாமும் பொங்கலுண்டு குதூகலிப்படைவர். புதிய நம்பிக்கை பொங்கிட வாழ்வும் வளமும் பெற்று வாழ்ந்து உழைப்பால்,அர்ப்பணிப்பால் தம்மைத் தாமே ஆளும் மக்களாய் பண்டைத் தமிழர் நாகரிகம் செழித்து இன்று வரை மக்களை வாழ்வித்துயரும் மாண்பு. தை பிறந்தால் வழி பிறக்கும் எனப் புதுத் தென்புடன் வாழ்வை ஆரம்பிக்கின்றனர்.

இலங்கையிலும் 70 ஆண்டுகளுக்கு மேலாக அடிமைத்தளை அறுத்து சுதந்திரக் காற்றைச் சுவாசித்து வாழும் நாகரிகத்தை அடைவதற்கு பல வழிகளிலும் போராடி வரும் எம் தமிழ் மக்கள் அந்த நாகரிகத்தை அடைந்திட வேண்டி தம் பல இலட்சம் உயிர்களை பலி கொடுத்தும் அந்த விடுதலை, சுதந்திரம் கிடைக்கவில்லையென்று கண்ணீரும் கம்பலையுமாய் வீழ்ந்து கிடக்கின்றனர்.

இருப்பினும் எம் தமிழ் மக்கள் இத்திங்களில் தைத்திருநாளில் பொங்கி மகிழ வேண்டும், விடுதலை விடிவு கிட்டும் என்றும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்றும் புது நம்பிக்கை கொண்டு எழுவோம் எனப் பொங்கி மகிழ்வோம்.

**மாவை.சோ.சேனாதிராசா,பா.உ**

## தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தி

கடந்த காலங்களில் ஏற்பட்ட துன்ப,துயரங்கள் நீங்கி ஒளிமயமான எதிர் காலம் உலகமெங்கும் பிரகாசிக்க தைப்பொங்கல் நாளில் எல்லாம்வல்ல ஞானப் பெருங் கூத்தனை பிரார்த்தித்து அனைவர்க்கும் தைப்பொங்கல் நல் வாழ்த் துக்களை இந்துசமயப் பேரவை சார்பில் தெரி வித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனிதநேயம் பற்றி எக்காளத்தொனியில் உலகமெங் கும் பேசும் இக்காலத்தில் இதற்கு மாறுபட்ட செயல்கள் நடைபெற்று வரு வது இப்புனித நாளிலிருந்து நிறுத்தப்பட வேண்டும்.மனித நேயத்தை பற்றிப் பேசுவதைக் காட்டிலும் மனிதநேயத்தோடு வாழ்வதே மேலானது.

அனைவரும் இதயசுத்தியோடு உயரிய கொள்கை யோடு எமது புனிதமான வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோமாக! தானுண்டு தனது குடும்பம் உண்டு என்று வாழ்வாரும் உளர்.அவற்றோடு அதற்குப் புறம்பாக உலகம் வாழ வேண்டும் உலகுக்காகவும் ஏதும் செய்ய வேண்டும்.அல்லது நினைக்க வேண்டும் என்ற புனித நோக்கோடு வாழ்பவர்களே மேலானவர்கள்.

இவ்விதம் வாழ்வதே மேலானது இதனையே ஔவையார் அறம் செய்யவிரும்பு என்றார். எப்பொழுதும் எக்கணமும் தர்மம் செய்யவிரும்பு உள்ளவனாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வுணர்வை ஏற்படுத்து வதற்கு எம் மிடம் ஈஸ்வர அர்ப்பணம் தோன்ற வேண் டும்.இதன் மூலம் பண்பட்ட உள்ளங்கள் மலர்கின்றன. இதற்கு தைப் பொங் கல் போன்ற ஆன்மீக நிகழ்வுகள் வழி சமைக்கின்றன. இந்நாளில் இறைவழிபாட்டில் ஈடுபடுவ தோடு ஏதிலிகளாக அல்லற்படுவோர்க்கும், ஏழைகளுக் கும் இயன்றவற்றைக் கொடுத்து சிவபிரான் அருளிற்கு ஆளாகுவோமாக!

**ஈசான.சி.சக்திகிரீவன்,தலைவர்**
**(இந்துசமயப் பேரவை)**

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020


# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

D.S 589

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 4546 960

விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
இரவு நேர வாகனப் பயிற்சி.
தவணை முறைக் கட்டணங்கள்.
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி.
விசேட பரீட்சை ஒழுங்குகள்.






L No. 1 Driving School

**யாழ்ப்பாணம்**
- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.(மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி அருகில்) 021 222 6699, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைசந்தி, தெல்லிப்பளை. 021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, போலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 4546 958
- இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்) 021 221 4488, 077 722 7740
- காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி. 021 225 2500, 076 2121 299

**வவுனியா**
- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444

**மன்னார்**
- 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732

**கிளிநொச்சி**
- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171



# Ahtus

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

**Ahtus Enterprises (Pvt) Ltd**
**ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்**

குழந்தைகள், தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

FARLIN
YOUR BABY IS OUR CONCERN

உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்











இல.30, கன்னாதிட்டி றோட்,
(வண்.சிவன் கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Tel : 077 742 7322

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020



வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

சுப முகூர்த்த பட்டுப்புடவைகளுக்குக் கைராசியான ஒரே நிறுவனம்...

## த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

- 40 வருட பாரம்பரியமுள்ள மொத்த சில்லறை விற்பனையாளர்
- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சல்வார் வகைகள்
- ரொப், லெக்ஜீன்ஸ் பஞ்சாபி வகைகள்
- Party Frocks வகைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், ரீ சேட், குர்தா வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்ய நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய கைராசியான ஒரே ஸ்தாபனம்

## T.SANGARAPPILLAI & SONS

21, Modern Market Power House Road, Jaffna.

**கிளை**
பிரமாண்டமான காட்சியறை
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5397

Email :sangarappillaiandsons@gmail.com



புதிய பாடநெறிகள் ஆரம்பம்

**18.01.2020 காலை 8.00 மணிக்கு**

பாடநெறிகள்

### *DIPLOMA_IN_ENGLISH*

சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 - 10.30 வரை நடைபெறும் 06 மாத காலப் பாடநெறி. (16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி) இந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

### *BUSINESS_ENGLISH / #ADVANCED_DIPLOMA_IN_ENGLISH*

சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 - 9.30 வரை நடைபெறும் 04 மாத கால பாடநெறி வங்கிகள், நிர்வாகம், முகாமைத்துவம் தொடர்பான துறைகளில் இருப்போர், திறன் தொழிலாளர்கள், அரச, தனியார் துறைகளில் தொழில் புரிவோர், ஆங்கில மொழியினை சிறந்த தொடர்பாடலுக்காக துல்லியமாகப் பயன்படுத்த விரும்புபவர்கள், வியாபாரிகள், வெளிநாடுகளுக்கு கல்வி மற்றும் தொழில் நிமிர்த்தம் செல்ல விரும்புபவர்கள் அனைவருக்கும் சிறந்த பாடநெறியாக இது அமையும்.

### *IELTS (Academic /General)*

சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3.00 மணி தொடக்கம் 5.30 வரை நடைபெறும் பாடநெறி
வெளிநாட்டு விசா மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல எடுக்கும் பரீட்சை

### *IELTS LIFE SKILLS A1*

திருமணம் புரிந்தவர்கள் UK செல்வதற்காக வழங்கப்படும் பாடநெறி மற்றும் பரீட்சை
சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.30 - 01.00 வரை இடம்பெறும் 03 மாத கால பாடநெறி.

### *Diploma in Computer Office Management*

சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் 6 மாத கால பாடநெறி.

### *Diploma in Sinhala Language*

சனி, ஞாயிறு தினங்களில் காலை நடைபெறும் பாடநெறி.

### *ENGLISH + IT + SINHALA*

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பாடநெறிகள்
கிழமை நாட்களில் நடைபெறும் 03 மாத கால பாடநெறி.



E-CITY is a TVCE registered institution

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 320/3, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 7106, 077 340 0418, 077 061 5242, 077 492 4166
www.ecitycollege.lk

## உங்கள் பயணம்! உங்கள் கைகளில்!

இன்றுமுதல்

| யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு |
|---|---|
| 077 4 11 4422 | 077 2 66 4422 |

செம்பா உலா

எங்களால்...! எங்களுக்காக...!

எம்முடன் இணைந்து சேவையில் ஈடுபட விரும்பும் வாகன உரிமையாளர்கள், சாரதிகள் தொடர்புகொள்ளலாம்!

விரைவில்

| | |
|---|---|
| கிளிநொச்சி | 077 4 22 4422 |
| முல்லைத்தீவு | 077 4 33 4422 |
| மன்னார் | 077 4 88 4422 |
| வவுனியா | 077 4 77 4422 |
| திருகோணமலை | 077 2 55 4422 |
| அம்பாறை | 077 2 99 4422 |

Download 'SEMBA'

GET IT ON Google Play | Download on the App Store


**Semba Services (Pvt) Ltd.**
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## துரித சேவை – பாதுகாப்பான பயணம்

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020


BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/Ls Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



LLB (Hons) Degree

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson | University of East London | SOLENT UNIVERSITY SOUTHAMPTON

MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS | ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk
BCAS Ranked "Platinum Partner" No.1 once again



British BUSINESS COLLEGE
Where Students Come First

## BBCஇன் புதிய அனுமதிகள்

BBC பாலர் பாடசாலையின்
20ஆவது வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2020ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான Canada கல்லூரியின்
பயிற்றுவிப்பாளர்களினால்
பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

20வது ஆண்டை நோக்கி BBC

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டுத் திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | $2^+$ முதல் 3 வரை | $3^+$ முதல் 4 வரை | $3^+$ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951



## congratulations!


British Business College
Congratulates our Pre - School & Nursery Students who have successfully completed the Pre - School - 2019











# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020


# மாபெரும் போட்டி

Yarl Smart Water Solution

## வடமாகாணத்தில் தனியார் நிறுவனங்களில் முன்னணி நிறுவனமான

# Yarl Smart Water Solution (pvt) Ltd

நிறுவனத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு மாணவர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் முகமாக நடாத்தப்படும்

# கவிதை, கட்டுரை, சித்திரம்

**போட்டிக்கான தலைப்புகள்**

| தரம் | தலைப்பு |
|---|---|
| தரம் 1, 2 | நீரின் பயன்கள் |
| தரம் 3, 4 | நீர் நம் உயிர் |
| தரம் 5 | நீரைப் பாதுகாப்போம் |
| தரம் 6, 7 | எதிர்கால சந்ததியினருக்கு நீரை சேமிப்போம் |
| தரம் 8, 9 | நீர் வளங்களை காப்போம் |
| தரம் 10 | சிக்கனமான தண்ணீர்ப்பாவனை |
| தரம் 11 | மழை நீர் சேகரிப்பு |
| தரம் 12, 13 | நிலத்தடி நீரைக் காப்போம் |
| 20 - 26 வயதிற்கிடைப்பட்டோர் | கடல் நீரை குடிநீராக்கும் திட்டமும் வழிமுறைகளும் |

**போட்டி தலைப்புக்கான நியந்தனைகள்**

சித்திரம் - 297 x 420 mm (A3 Size Paper )

| தரம் | கட்டுரைக்கான சொற்களின் எண்ணிக்கை | கவிதைக்கான வரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தரம் 1, 2 | 30 - 50 | 4 - 6 |
| தரம் 3, 4 | 50 - 80 | 6 - 10 |
| தரம் 5 | 80 - 150 | 8 - 10 |
| தரம் 6, 7 | 150 - 200 . | 10 - 12 |
| தரம் 8, 9 | 200 - 250 | 10 - 15 |
| தரம் 10 | 250 - 300 | 10 - 18 |
| தரம் 11 | 250 - 400 | 10 - 20 |
| தரம் 12, 13 | 250 - 500 | 15 - 30 |
| 20 - 26 வயதிற்கிடைப்பட்டோர் | 300 - 1000 | 20 - 50 |

**போட்டிக்கான விதிமுறைகளும் நியந்தனைகளும்.**

- 6 முதல் 26 வயது வரையான பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்ற முடியும்.
- அனைத்து போட்டியாளர்களும் தங்கள் ஆக்கத்துடன் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பனவற்றை இணைத்து அனுப்பவேண்டும்.
- பாடசாலை மாணவர்கள் தங்கள் வயதை உறுதிப்படுத்தும் முகமாக வகுப்பாசிரியர் மற்றும் அதிபரின் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும்.
- வயதிற்கு பொருத்தமான தலைப்பில் கவிதை, கட்டுரை, சித்திரம் போன்ற ஏதாவது ஒரு ஆக்கத்தை மட்டும் தெரிவு செய்து போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- 26 ஜனவரி 2020 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
- போட்டியாளர் சொந்த ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம். ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்களை சமர்ப்பிக்கலாகாது.
- சகல ஆக்கங்களும் விடயப்பொருள் சார்ந்தவையாக இருக்கவேண்டும்.
- சகல ஆக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள், வரிகள் மற்றும் அளவுகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும்.
- எழுத்து சம்மந்தமான ஆக்கங்கள் தமிழ் மொழியில் மட்டும் எழுதப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஆக்கப் போட்டியிலும் முதல் மூன்று இடத்தை பெறும் போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் 06.02.2020 அன்று நடைபெறவிருக்கும் ஓராண்டு நிறைவு நிகழ்ச்சியின் போது பிரமாண்ட மேடையமைப்பில் கௌரவித்து வழங்கப்படும்.

விண்ணப்ப படிவங்களை பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலை அலுவலகத்திலும் ஏனையவர்கள் எமது காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும்

**Yarl Smart Water Solution (Pvt) Ltd**

No. 341, K.K.S Road, Jaffna.

Hotline:- 0770 573 3684 , 076 666 5267

yarlsmartwater@gmail.com www.yarlsmartwater.com

அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்

# Shivahami


## Mahal









எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ். மண்ணில் ஆரம்பித்திருக்கின் றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக் கொள்ள எம்மைநாடுங்கள்!

**Adiyapatham Road, Thirunelvely,**
**021 205 2288 / 077 932 6147**
**Sivakaamymahal@gmail.com**
**www.shivahamimahal.com**

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020


அனைவருக்கும் தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

## அம்மன்

கட்டடப்பொருள் வாணிபம்

**Amman Hardware**



வீடுகள், கட்டடங்கள் கட்டுவதற்கான சகல விதமான தரமான பொருட்களையும் மலிவான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்

இல.460/11, முல்லைவீதி, தருமபுரம்.

No:460/11, Mullai Rood, Tharmapuram.

T.p:- 077 304 4223

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

## சசிகா லேணர்ஸ்

Reg No.DS882



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்!!

கிளை நிறுவனங்கள் :

மல்லாகம் : 021 224 3393

பண்டத்தரிப்பு:021 225 2333

காரைநகர்: 021 225 2454

சங்கானை: 021 225 1664

வேலணை: 021 221 5472

யாழ் மத்தி (TOWN): 021 222 8004

தலைமை காரியாலயம்

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7578, 7678/ 077 614 0361

077 722 6247

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

TP: 021 226 0999/ 071 775 0999

E-mail: sasikadrivingschool@gmail.com

Web-sasikalearners.com

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI (AMI METHOD) ENGLISH MEDIUM



HURRY TO REGISTER

AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS

- எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM). கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப் படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல் ஆகும்.
- 2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாடசாலைக்கு உள்வாங்கப்படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

OUR VISION

- To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

OBJECTIVES

- To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.
- To provide enriching strategies that would encourage students to be goal- oriented and to be self- managers.
- To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion,satiating the need of the intellect, the body and the soul.

CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS

154 , BROWN ROAD, JAFFNA.

TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172

Kutty Chutty Montessori

புதிய மாணவர்கள் அனுமதி - 2020

கோண்டாவில் கிழக்கு

## குட்டி சுட்டி முன்பள்ளி

## அகம் குழந்தைகள்

பகல் நேர காப்பகம்



நேரம் காலை மாலை 7.30-5.00 மணி வரை

குறைந்த மாதக் கட்டணம்

2+ 2500/-

3+ 3000/-

4+ 3000/-

அரச / தனியார் நிறுவன உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான வீட்டுச் சூழல் முறையின் பராமரிப்பு

- திறன் வகுப்பறை ஊடான முன்பள்ளி மாணவர்களை கற்பித்தல்
- விளையாட்டினுடான கற்பித்தல் செயன்முறை
- தமிழ், ஆங்கில மொழி மூலமான கற்பித்தல், குழந்தைகளுக்கான பிரத்தியேக பாதுகாப்பான விளையாட்டு மைதானம், ஓய்வறை, உணவு வசதி
- மாணவர்களின் திறன் விருத்திக்கான விளையாட்டுப் போட்டி, கண்காட்சி, சிறுவர் தினம், கல்விச் சுற்றுலா, வருட இறுதி கலை நிகழ்வுகள்


இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.

தொடர்புகளுக்கு: 077 848 0615, 021 221 4863

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020







# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020


## நீங்கள் எங்களைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்

1. இலகுவாக பட்டச்சான்றிதழுக்கான உறுதிப்படுத்தல் சான்றிதழ் பெறுவதற்கான அங்கீகாரம்.
2. உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்
3. இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம்
4. IAU வின் அங்கீகாரம்
5. WHED யின் அங்கீகாரம்
6. UNESCO அங்கீகாரம்
7. Costa Rica வின் அங்கீகாரம்
8. தரம் வாய்ந்த பேராசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை
9. இலகு தவணை முறையில் கட்டணங்களை செலுத்தலாம்
10. டிஜிற்றல் Projector மூலம் கற்பித்தல்

**B.Sc in Computer Science**
Duration : 3 Years
Entry Qualification : G.C.E. O/L or A/L

**B.Sc in Computer Science (Top Up)**
Duration : 1 Year
Entry Qualification : 2 Years Diploma / HND

**M.Sc in Computer Science**
Duration: 01 Year
Entry Qualification : Any Degree

**P.G.D.E Education**
Duration : 01 Year
Entry Qualification : Any Degree

**B.Sc in Agriculture Science(Top-Up)**
Duration: 01 Year
Entry Qualification: Dip.in Agriculture (02 Years)

**B.Sc in Agriculture Science**
Duration: 03 years
Entry Qualification: G.C.E (O/L) / (A/L)

**Ph.D in Computer Science**
Duration : 2 ½ Years
Entry Qualification : Any Master Degree

வட்டி இல்லாக் கடன் ஒழுங்கு செய்து தரப்படும்

**B.Sc in Physical Education & Sports / Higher Diploma in Sports Coaching**
Duration : 02 Years
Entry Qualification : G.C.E (O/L) / (A/L)

**M.Sc in Physical Education & Sports**
Duration:01 year
Entry Qualification: B.Sc in Physical Education & Sports

**B.Ed. (Top - Up)**
Duration: 01 Year
Entry Qualification: Teacher's Training College/College of Education

வங்கிக் கடன் ஒழுங்கு செய்து தரப்படும்

**M.Ed.**
Duration: 01 Year
Entry Qualification: B.Ed./P.G.D.E

**Ph.D**
Duration : 02, 1/2 Years
Entry Qualification : Any Master Degree

**D.Ed.**
Duration: 02, 1/2 Years
Entry Qualification: M.Ed.

**P.G.D**
Duration: 1 Year
Entry Qualification: Any Degree

**B.Sc in Civil Engineering (Top-Up)**
Duration : 01 year
Entry Qualification : Dip.in Civil Engineering (02 Years)

**BA in English (Top UP)**
Duration : 01 year
Entry Qualification : Dip. in English (02 Years)

**MBA**
Duration : 01 year
Entry Qualification : Any degree

Reg.No : PV 71651
North Lanka IIT
Top Floor, People's Bank Building,
Stanley Road Jaffna
T.P. 076 750 4535 / 021 492 7088

Reg.No : PV 86851
IHHRI (PVT) LIMITED
6, Ramakrishna Terrace,
Wellawatte, Colombo - 06
Tel : 011 236 3131

Matale Lanka City Campus
Mr.C. Jeevaratnam
614/C, Main Street, Matale.
Tel : 071 3476838/ 070 3199333

Hatton Lanka City Campus
(Top Floor Hatton Nersing Home ),
275, Dimpula Road, Hatton
T.P. 076 759 2666

Eastern Lanka City Campus
Valaichchenai, Junction (Trinco Road)
Valaichchenai - Batticaloa.
T.P. 077 334 2566 / 077 320 3276

Vavuniya Lanka City Campus
Station Road,
Vavuniya
T.P. 076 488 6169

அனைவருக்கும் இனிய பொங்கல் தின நல் வாழ்த்துக்கள்



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்!!

## விக்கி லேணர்ஸ்

Vikki Learners L

விக்கி லேணர்ஸ் (கிளைகள்)
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
K.K.S. வீதி, சுன்னாகம்
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி (பலாலி வீதி)

தொடர்புகளுக்கு
021 722 3201,
077 830 8360

www. vikki learners


## வையகம் உய்த்திடும் பொங்கலிது

வயல் நிலம் உழுது வளம்பெற உழைக்கும்
விவசாயி வியர்வையும் வான்மழை துளிகளும்
வயப்படும் நெற்கதிர் வளைந்து நிலம் தொடும்
விடியலில் அறுவடை வையகம் உய்யும்
துயரினை களைந்திடும் தைப் பொங்கல் நாளிலே
தேன்சுவை முக்கனி தெவிட்டாத கரும்புடன்
அயலவர் உறவுடன் அமுதினை படைத்து
உண்போம் மகிழுவோம் இத் தைத்திருநாளிலே

"கலைமாமணி"
கே. ஆர். திருத்துவராஜா



## புதுவாழ்வு தந்தெம்மை இரட்சிப்பாய்

பொழுதது புலரும் வேளை மழுவது தாங்கும்
முழுமுதற்கடவுளைப் பூசித்து மகிழும்
உழுதுண்டு வாழும் உழவர்கள் உவகையில்
அறுசுவைப் பொங்கல் உதயனுக்குப் படைத்து
பொழுதெலாம் உற்றார் உறவினரொடு பகிர்ந் துண்டு
பூரிப்போடு உலரவும் பொங்கல் திருநாளில்
வழுவிலா சாதனையால் வாழ்வு வளம்பெறவும்
வலுவிழந்தோர் தம் வேதனைகள் தீரவும்
பொழுதெலாம் உன்னைப் பூசித்தோம் பகலவனே
புதுவாழ்வு தந்தெம்மை இரட்சிப்பாய்

கலைக்குரிசில் மு. தணிகாசலம்
கற்கோவளம்

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2020






# பாகிஸ்தானில் கடும்பனி 26 பேர் பரிதாபமாகப்பலி



(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் மழை மற்றும் கடும் பனிப்பொழிவு காரணமாக ஒரேநாளில் 26 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருவதுடன், பனிப்பொழிவும் அதிகரித்துள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வீடுகளின் மேற்கூரைகளில் அதிகளவில் பனி படர்ந்ததால், பாரம் தாங்காமல் கூரைகள் இடிந்து விழுந்துள்ளன.

மழை மற்றும் பனிப்பொழிவு தொடர்பான விபத்துகளில், ஒரே நாளில் பாகிஸ்தானில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானின் 7 மாவட்டங்களில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# முன்னாள் ஜனாதிபதி முஷரப்பிற்கு வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பு சட்டவிரோதமானது

## லாகூர் உயர்நீதிமன்றம் தள்ளுபடி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷரப்பிற்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை லாகூர் உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.



முஷரப் குறித்து முன்னெடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் பாகிஸ்தானின் அரசமைப்பிற்கு முரணானது என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குற்றச்சாட்டை பதிவு செய்தமை, சட்டத்தரணிகள் தெரிவு செய்யப்பட்ட விதம் உட்பட அனைத்தும் சட்டவிரோதமானது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் ஆட்சியாளருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை தீர்ப்பு கைவிடப்பட்டுள்ளது என அரச தரப்பு வழக்குத்தொடுநர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு எதிரான தீர்ப்புகள் எதுவும் இனிமேல் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2007 இல் முஷரப் பாகிஸ்தான் அரசமைப்பை இடைநிறுத்தியமை தொடர்பாக அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையையே லாகூர் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

எனினும் மற்றொரு நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்யலாம் என பி.பி.சி. தெரிவித்துள்ளது. (ஐ-2)

# லிபியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறல்

## ரஷ்யா-துருக்கி அதிருப்தி

(திரிபோலி)
லிபியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம், அமுலுக்கு வந்த சில நிமிடங்களிலேயே மீறப்பட்ட சம்பவம் ரஷ்யா, துருக்கி நாடுகளை கொதிப்படைய வைத்துள்ளது.



லிபியாவில் தலைநகர் திரிபோலியைத் தலைமையகமாகக் கொண்டு மேற்குப் பகுதியை ஆண்டு வரும் ஃபையெஸ் சராஜின் அரசுக்கும், கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் முன்னாள் இராணுவத் தளபதி காலிஃபா ஹிஃப்தர் தலைமையிலான படையினருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், ரஷ்யா, துருக்கி நாடுகளின் முன்முயற்சியிலும் ஐ.நா.முன்னிலையிலும் மேற்கொள்ளப்பட்ட சண்டை நிறுத்தம் அமுலுக்கு வந்த சில நிமிடங்களிலேயே மீறப்பட்டது.

இதனை ஃபையெஸ் சராஜின் அரசு இதுபோன்ற தாக்குதல் தொடர்ந்தால் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.


லிபியாவை 40 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டு வந்த அல்-கடாபியின் ஆட்சியை, அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் உதவியுடன் கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு கவிழ்த்தனர்.

எனினும், அதற்குப் பிறகு அந்நாட்டில் பல்வேறு ஆயுதக் குழுக்களும் தங்களுக்குள் தொடர்ந்து போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், துருக்கியைப் பூர்வீகமாகக் கொண்ட பிரதமர் ஃபையெஸ் அல்-சராஜ் தலைமையிலான அரசுக்கு உதவும் நோக்கில், இராணுவ ஒத்துழைப்பு அளிக்க, துருக்கி தமது இராணுவத்தை அனுப்பியுள்ளது. (ஐ-2)

# அமெரிக்காவை எதிர்ப்பதற்கு அனைவரும் இணைய வேண்டும்

## ஈரான் தலைவர் வலியுறுத்து



(டெஹ்ரான்)
அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் எதிர்க்க மத்திய கிழக்கிலுள்ள அனைவரும் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும் என்று ஈரான் சிரேஷ்ட தலைவர் அயதுல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார்.

கட்டார் இளவரசர் தமிம் பின் ஹமத் அல் தானியுடனான சந்திப்பின் போதே அயத்துல்லா அலி காமெனி இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அயதுல்லா அலி காமெனி மேலும் கூறுகையில், 'ஊழல் நிறைந்த அமெரிக்கா மற்றும் அதன் நட்புகளால் இப்பிராந்தியத்தில் சாதகமற்ற சூழல் நிலவுகிறது. இதனை எதிர்ப்பதற்கு ஒரே தீர்வு பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும்' என சுட்டிக்காட்டினார்.

கடந்த 3 ஆம் திகதி அமெரிக்காவின் ஆளில்லா விமான ஏவுகணைத் தாக்குதலால், ஈரானியப் புரட்சி பாதுகாப்புப் படையின் குட்ஸ் படைப்பிரிவுத் தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈராக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

மீண்டும் ஈரான், ஈராக்கில் பக்தாத் அருகே இருக்கும் 'அன் அல் ஆசாத்' மற்றும் 'ஹாரிர் கேம்ப்' ஆகிய விமானத் தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதன் காரணமாக ஈரான் - அமெரிக்கா இடையே பதற்றம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# ஒரு மாதத்திற்கு மேலாக நீடித்த போராட்டத்திற்கு முதல் வெற்றி

(பரீஸ்)
பிரான்ஸில் அரசின் ஓய்வூதியத் திட்ட சீர்திருத்தத்தை எதிர்த்து நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டத்திற்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.



ஓய்வூதிய சீர் திருத்தத்தில் பல்வேறு மாற்றங்களை தொழிலாளர்கள் கோரிக்கையாக வைத்துள்ள நிலையில், அரசு முதல் கட்டமாக வயது வரம்பு தொடர்பான பிரச்சினைக்கு மட்டும் தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இதற்கமைய 62 வயதில் இருந்து 64 வயதாக மாற்றப்பட்ட ஓய்வூதியக் காலத்தை, மீண்டும் 62 வயதாகவே மாற்றியுள்ளது.

நேற்று முன்தினம் இதுகுறித்து பிரதமர் எத்துவார் பிலிப் கூறுகையில், 'வேலை நிறுத்தம் ஆரம்பித்து இன்று 40 நாட்கள் ஆன நிலையில், அரசு இந்த முடிவு எடுத்துள்ளது. நான் குறுகிய கால நடவடிக்கையாக, கோரிக்கையின் ஒரு பகுதிக்கு தயாராகிறேன். அதற்கான பொறுப்பை நான் ஏற்கின்றேன். குறைந்தது 2027 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு இந்த வயது வரம்பு குறைப்பு தொடரும்' எனத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் பல்வேறு புதிய விதிமுறைகளை ஓய்வூதியத் திட்டத்துக்குள் கொண்டுவந்ததால், தற்போது ஊழியர்களிடையே பெரும் நம்பிக்கையின்மை எழுந்துள்ளது.

இதனால் அரசின் ஓய்வூதியத் திட்ட சீர்திருத்தத்தை எதிர்த்து, கடந்த 5 ஆம் திகதி முதல் பிரான்ஸின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், பொலிஸார், விமான நிலைய ஊழியர்கள் என பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# அரச குடும்ப பொறுப்புக்களிலிருந்து ஹரி விலகல்; ராணி எலிசபெத் ஒப்புதல்

(லண்டன்)
இங்கிலாந்து மற்றும் கனடாவில் இனிவரும் காலங்களில் நேரத்தை செலவிட இருப்பதாக இளவரசர் ஹரி மற்றும் மொர்க்கல் தம்பதி எடுத்த முடிவுக்கு ராணி எலிசபெத் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இளவரசர் ஹரிக்கும் மற்றும் அவரது மனைவி மொர்க்கலுக்கும் அரச குடும்பத்துடன் சில மாதங்களாகவே கருத்து வேறுபாடு நிலவுவதாக இங்கிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், இதனை வதந்தி என்று வழக்கம்போல் இங்கிலாந்து அரச குடும்பம் அறிவித்தது.

இந்நிலையில் இங்கிலாந்து அரச குடும்பத்தின் உயர் பொறுப்புகளிலிருந்து ஹரியும் அவரது மனைவி மொர்க்கலும் விலகுகின்றனர் என்றும் இனிவரும் காலங்களில் பிரிட்டன் மற்றும் கனடாவில் தங்களது நேரத்தை செலவிட இருப்பதாக கடந்த புதன்கிழமையன்று ஹரி அறிவித்தார்.

இளவரசர் ஹரியின் இந்த முடிவை இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

இந்த நிலையில் இளவரசர் ஹரி - மொர்க்கலின் முடிவு குறித்து நேற்று முன்தினம் இங்கிலாந்து ராணி ஆலோசனை நடத்தினார். இதன் முடிவில் ஹரி மற்றும் மொர்க்கலின் முடிவுக்கு ராணி எலிசபெத் ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் அரச குடும்பம் இதற்கு முழு ஆதரவு அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் திட்டம்

# மாகாண சபை அதிகாரங்களைப் பறிக்கும் சதி!

## முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

**நாடளாவிய ரீதியில் ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கப்போவதாகவும் அதற்கேதுவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் மூன்று பாடசாலைகளைத் தெரிவு செய்யவுள்ளதாகவும் அறிவித்திருந்த நிலையில் அது தொடர்பிலான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கின்ற மற்றுமொரு புதிய சதி முயற்சியென வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் எச்சரித்தார்.**

யாழ்.ஊடக அமையத்தில் கடந்த வாரம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி அமைச்சின் இப்புதிய திட்டத்திற் கேதுவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்து மூன்று பாடசாலைகளைத் தெரிவு செய்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் நீண்ட, நெடிய போராட்டத்தின் பலனாக கிடைத்த அற்ப சொற்ப சலுகையே மாகாண சபையாகும். அதில் கல்வியும் பகிரப்பட்டதொன்றே.

அவ்வாறு பகிரப்பட்ட கல்வியை பறித்து மத்திக்கு மீண்டும் கொண்டு செல்ல முன்னெடுக்கப்படும் முயற்சியே தற்போதைய மத்திய கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை திட்டமாகும்.

தேசிய பாடசாலை என்பது வெறுமனே மாகாணப்பாடசாலையிலிருந்து பெயர்ப்பலகை மாற்றத்தை மட்டுமே கொண்டிருக்கின்றது.

மாணவர்களுக்கான பாடவிதானம், தகுதி தராதரம், ஆசிரிய பயிற்சி, சம்பளமென அனைத்துமே மாகாண பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைகளுக்கும் ஒன்றாகவே இருக்கின்றன.

அவ்வகையில் அரசின் ஆயிரம் தேசிய பாடசாலை என்ற புதிய அறிவிப்பு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பின்கதவால் பறிக்கின்றதொரு நடவடிக்கையேயன்றி வேறொன்றுமில்லையென்பதை மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் மாகாண பாடசாலைகள் தேசிய பாடசாலையாக தர முயர்த்துவதாக இதனை சிலாகித்து வருகின்றனர்.

உண்மையில் இவ்வாறு தேசிய பாடசாலையென மேலும் பாடசாலைகளை உள்ளீர்ப்பது மாகாண சபைக்கென வழங்கப்பட்ட அற்ப சொற்ப சலுகையையும் பறித்துக் கொள்ள பின்னப்பட்ட சதியென்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சுமார் 3000 பாடசாலைகள் போதிய மாணவர்கள் வரவின்மையால் பூட்டப்படும் நிலையை எய்தியுள்ளதாக முன்னைய அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அரசியல் நலன்களுக்காக முன்னெடுக்கப்படும் தேசிய பாடசாலை எனும் மாயமானினால் கிராமப்பாடசாலைகள் பல மூடப்படுகின்ற நிலையை நோக்கிச் செல்கின்றன.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள அருகிலுள்ள பாடசாலைகளினது வளங்களை உரிய வகையினில் பேணினால் வளங்களை பகிர்ந்தளித்தால் மாணவர்கள் நகரப்பாடசாலைகளை நோக்கி அலையும் நிலையைப் போக்க முடியும்.

தேசிய பாடசாலைகளுக்கென ஒதுக்கப்படவுள்ள நிதியை மாகாண சபை பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்வதன் மூலம் மாணவர்களை திறமை மற்றும் ஆற்றல் அடிப்படையில் அவர்களின் தேவை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் உரிய பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ள முடியும்.

குறிப்பாக அரசு தற்போது தெரிவித்துள்ள தேசிய பாடசாலைகளுக்கு பதிலீடாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தெரிவு செய்யப்படும் மூன்று பாடசாலைகளை துறைசார்ந்த கற்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் தேவைகளின் அடிப்படையில் மாணவர்கள் தமக்கான பாடசாலைகளைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

இதன்மூலம் விளையாட்டு, கலைத்துறை, தொழில்சார் பயிற்சி என வகைப்படுத்தி இவ்வாறாக பாடசாலைகளை வளப்படுத்திக்கொள்ள மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென தெரிவித்ததுடன் மாகாண சபைகளது அதிகாரங்களை பறித்துக்கொள்வதை தடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1946

### சுகன்யா



விடிகின்ற பொழுது
எங்கும்
கரும்பாய்
இனிக்கட்டும்
இந்த
தைத் திருநாள்
முதல்...
இனிய
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்

### டதுசுயன்



மொபைல் போன் பெரிய சைஸ் ஆனதும்
ஸ்மார்ட் போன்னு சொல்றாங்க...
மனுசன் பெரிய சைஸ் ஆயிட்டா
குண்டன் தடியன்னு தான் சொல்றாங்க...

### ஷனா

ஆயிரம்
பேரை கூட
எதிர்த்து
நில்!
ஆனால்
எப்போதும்
ஒருவரை கூட
எதிர்பார்த்து
நிற்காதே!




### ராகுலன்

வயிறு வலிக்குதும்மா... வயித்திலே ஒண்ணும்
இல்லேன்னா, அப்படித்தான் வலிக்கும்!
அப்ப நீ நேத்து தலைவலின்னு சொன்னியே...



### முத்துகுமார்



கால ஆட்டினா வீட்டுக்கு ஆகாதாம்.. எதிரிய
பழிவாங்க பேசாம அவன் வீட்டுக்கு போயி கால
ஆட்டிட்டு ஓடியாந்திர வேண்டியது தான்...

### கவி




ஏன்டா அந்த ஆள திருப்பி அனுப்பிட்டாய்?
அவர் 2020 கலண்டர் கேக்குறாரு.
நம்மகிட்ட வெறும் 1000 கலண்டர் தான் இருக்கு!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் "தமிழர் திருநாள்" பொங்கல் நிகழ்வு








(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் வருடந்தோறும் இடம்பெறும் "தமிழர் திருநாள்" பொங்கல் உற்சவ நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நேற்றுக் காலை முதல் சிறப்பு பூஜைகள் இடம்பெற்று மதியம் அபிஷேகம் இடம்பெற்று அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்தப் பொங்கல் நிகழ்வில் செம்மலை கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் லோகேஸ்வரன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஆலய சூழலில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு பொங்கல் நிகழ்வுகள் மற்றும் அதில் பங்கு பற்றிய மக்களை புகைப்படம் மற்றும் காணொலி பதிவுகள் எடுத்திருந்ததுடன் தென்பகுதியிலிருந்து பௌத்த துறவிகள் அடங்கிய குழுவினரும் ஆலய பகுதிக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

## மாணவர்களுக்கான பற்சுகாதார செயற்றிட்டம்




முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள தரம் ஒன்று மாணவர்களுக்கான பற் சுகாதார செயற்றிட்டத்திற்கு அமைவாக தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய மருத்துவ நலச் சங்கத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பற் சுகாதார செயற்றிட்டத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான முதலாவது செயலமர்வும் பற்பசை, பற்தூரிகை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இதன்போது பல் வைத்தியர்களால் ஆசிரியர்களுக்கு பற் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்துக்களும் ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கு பதில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, முல்லை.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி புவனராஜா, கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின்செயலாளர்ஸ்ரீகௌரிபாலா, முல்லை. வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், முல்லைத்தீவு பொறுப்பு வைத்திய அதிகாரி, பல் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (9-350)




## பொங்கல் பொருட்கள் வழங்கல்



(நெளுக்குளம்)

எம்.ஜி.ஆரின் பிறந்தநாளை முன்னிட்டு எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றத்துடன் இணைந்து தமிழ் விருட்சம் அமைப்பும் பொங்கல் பொருட்களை நேற்று வழங்கி வைத்தது.

வவுனியா பெரியமடு கிராமத்தில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு பொங்கல் திருநாளை சிறந்த முறையில் கொண்டாட இவ் உதவிகளை எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றம் வழங்கி வைத்திருந்தது.

இதன்போது எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றத்தின் தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பின் நிர்வாகத்தினரும் கலந்து கொண்டிருந்ததுடன் பெரியமடு கிராம மக்களின் பல்வேறு குறைகளையும் கேட்டறிந்து கொண்டனர். (9-299)



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் வவுனியா வர்த்தகர் சங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக நேற்று முன்தினம் வர்த்தகர் சங்கத்தினால் வசதியற்ற 30 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ்.சுஜன் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வைத்தியர் எஸ்.லவன், வர்த்தகர் சங்கத்தின் போசகரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான செந்தில்நாதன் மயூரன், வர்த்தகர் சங்கத்தின் பொருளாளர், முகாமையாளர், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தனர். (9-299)

## சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

(குருமன்காடு)

சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்களுக்கு வவுனியா பொலிஸாரால் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா, பண்டாரிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் மற்றும் உக்கிளாங்குளம் ஆகிய பகுதிகளில் பொலிஸாரினால் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களில் இணைந்து கட ந்த ஆண்டு பணியாற்றியவர்களுக்கு அவர்களது சேவையைப் பாராட்டி பொலிஸாரால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் 9 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் சிவில் பாதுகாப்புக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டு பிரியாவிடை கொடுக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதில் வவுனியா பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி அன்வர், பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம உத்தியோகத்தர், பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## பேராற்றுப் பாலம் விரைவில் திறப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தின் கீழ் எட்டுக்கு மேற்பட்பட்ட கிராமங்களுக்கான பிரதான பாதையை குறுக்கறுத்துச்செல்கின்ற பேராற்றுக்கு குறுக்காக 40.58 மில்லியன் ரூபா செலவில் புதிய பாலம் ஒன்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தின் கீழ் உள்ள கனகரத்தினபுரம், மன்னாகண்டல், இடதுகரை உள்ளிட்ட எட்டு வரையான கிராமங்களுக்குச் செல்கின்ற பிரதான வீதியை குறுக்கறுத்துச் செல்கின்ற பேராற்றுக்கான பாலத்தினை அமைத்துத்தருமாறு பிரதேச மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறிப்பாக, மழை காலங்களில் பேராறு பெருக்கெடுக்கும் போதும் முத்தையன்கட்டு வான் கதவுகள் திறக்கப்படும் போதும் இதன் ஊடான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படுவதுடன், மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பத்துக் கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் மாற்றுவழிப்பாதைகளால் சென்று தமது தேவைகளை நிறைவேற்றி வந்தனர்.

மேற்படி பேராற்றுக்கு குறுக்காக காணப்பட்ட பத்துக்கண் மதகு எனக் குறிப்பிடப்படுகின்ற இப்பகுதியில் குறித்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. 95 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், விரைவாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# ஐ.தே.கவிலிருந்து பிரிந்து உருவாகிய புதிய கட்சிகள் நிலைத்ததில்லை

## சஜித் அணிக்கு ஆசுமாரசிங்க இடித்துரைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுப் பிரிந்து உருவாக்கப்பட்ட புதிய கட்சிகள் எவையும் நிலைத்ததில்லை. அவ்வாறு எமது கட்சியிலிருப்பவர்கள் புதிய கட்சியை உருவாக்குவார்களாயின் அது எதிரணியின் சதித்திட்டமேயாகும்.

ஏனெனில் கட்சியைப் பிளவுபடுத்துவதற்காக எதிரணி நிதியளிப்பதன் காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் வாக்குறுதிகளை வழங்குவதனூடாகவோ மாத்திரமே புதிய கட்சி உருவாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடு குறித்துக் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

உண்மையில் கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் பாரிய முரண்பாடுகள் எவையும்




இருப்பதாக நான் கருதவில்லை. கட்சியில் தலைமைத்துவத்தை விடவும், அதன் யாப்பு மற்றும் கொள்கைத்திட்டம் ஆகியவையே முக்கியத்துவம் பெறுகின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு கட்சியின் தலைவர் இல்லையென்ற போதிலும் அவர் தேர்தலில் வெற்றி பெற்றமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

கட்சிக்குள் வெவ்வேறு கருத்துக்களும் நிலைப்பாடுகளும் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டுப் பிரிந்து உருவாக்கப்பட்ட புதிய கட்சிகள் எவையும் நிலைத்ததில்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு எமது கட்சியிலிருப்பவர்கள் புதிய கட்சியை உருவாக்குவார்களாயின் அது எதிரணியின் சதித்திட்டம் என்றே கூறவேண்டும்.

ஏனெனில் கட்சியைப் பிளவுபடுத்துவதற்காக எதிரணி நிதியளிப்பதன் காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் வாக்குறுதிகளை வழங்குவதனூடாகவோ மாத்திரமே புதிய கட்சி உருவாகும். குறிப்பாக அண்மையில் அவிசாவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பதவிக்காகக் கட்சியைப் பிளவுபடுத்த மாட்டேன் என்று சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார். எனவே அவர் கூறியபடி நடந்து கொள்வார் என்று நம்புகின்றேன்.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாஸ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவார். அதேபோன்று விரைவில் நாம் அமைக்கவிருக்கும் விரிவான கூட்டணிக்கு கரு ஜெயசூரிய தலைமைதாங்கி வழி நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் கட்சிக்குள் கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து 23 பேர் படுகாயம்!



(கினிகத்தேனை)

கினிகத்தேனை- தியகல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 23 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த 23 பேரும் வட்டவளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன்-கண்டி பிரதான வீதியில் ஹற்றனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பேருந்து கண்டியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற பேருந்தும் கினிகத்தேனை-தியகல பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக கினிகத்தேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 61 சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தேசிய தௌபீக் ஜமாத் இயக்கத்துடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்ட 61 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

நுவரெலியாவிலுள்ள தேசிய தௌபீக் ஜமாத் தலைமையகத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர்கள் நேற்றுக் காலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.ரிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 28 ஆம் திகதி வரையான விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 64 பேரில் ஏற்கனவே மூவருக்குப் பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியர் ஷாபியை சேவையில் இணைக்க இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை

(கொர்ழும்பு)

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள வைத்தியர் எஸ்.எஸ்.எம்.ஷாபி, தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு விடுத்த கோரிக்கை தொடர்பாக இது வரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்தது.

அரச சேவை ஆணைக்குழு விடுத்த ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட வைத்தியர் ஷாபி தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின்



செயலாளரின் ஊடாக அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவை குழுவிடம் கோரியிருந்தார்.

இந்நிலையில் குறித்த வைத்தியருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்தி அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ள போதிலும் இதுவரை குறித்த அறிக்கை கிடைக்கவில்லை என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்தது.

அந்த அறிக்கை மற்றும் வைத்தியர் ஷாபியின் கோரிக்கை. ஆகியவை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் தனது பரிந்துரையை முன்வைக்கும் வரை குறித்த வைத்தியரை கடமையில் இணைத்துக் கொள்வது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படாது என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொங்கல் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு 60 பானைகளில் பொங்கல் நிகழ்வு இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறும்.

இதில்,பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசூதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ-5)

# தெருமூடி மடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தெரு மூடி மடத் திறப்பு விழா இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் இடம்பெறும். (இ-5)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இயற்கை ஊக்குவிப்பு கழக மாணவர்களுக்கான பறவை அவதானிப்பு களப் பயிற்சி இன்று தொண்டைமானாறில் நடைபெற்றது. இக் களப் பயிற்சின் வளவாளர்களாக சி.சி.எச்.நிறுவன களப்பறவையியல் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பறவைகளை எவ்வாறு அவதானித்தல், நடத்தை, வேறுபாடு, புலம்பெயர்தல், அடையாளம் காணல், இயற்கை சமநிலை எனப் பல விடயங்கள் கள கற்கையூடாக நடைபெற்றது.

# மார்கழி மாதத்திலே

மார்கழி மாசத்திலேதான் - கண்ணே நீ
மாராசாவைப் பார்க்கையிலே

தைப் பொங்கல் காலத்திலே - கண்ணே நீ
தயிரும், சோறும் திங்கையிலே

மாசி மாசக் கடைசியிலே - கண்ணே நீ
மாமன் வீடு போகையிலே

பங்குனி மாசத்திலே - கண்ணே நீ
பங்குச் சொத்தை வாங்கையிலே

சித்திரை மாசத் துவக்கத்திலே - கண்ணே நீ
சீர் வரிசை வாங்கையிலே.

வைகாசி மாசத்திலே - கண்ணே நீ
வயலைச் சுற்றிப் பார்க்கையிலே

ஆனி மாசக் கடைசியிலே - கண்ணே நீ
அடியெடுத்து வைக்கையிலே

அகஸ்மாத்தா ஆவணியில் - கண்ணே நீ
அரண்மனைக்குப் போகையிலே

ஐப்பசி மாசமெல்லாம் கண்ணே - நீ
அப்பன் வீடு தங்கையிலே

கார்த்திகை மாசத்திலும் - கண்ணே
கடவுளுக்குக் கையெட்டி.

# பழமொழிகள்

- கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்.
- கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.
- கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு.
- கல்விக்கு இருவர், களவுக்கு ஒருவர்.
- கவலை உடையோர்க்குக் கண்ணுறக்கம் வராது.
- களை பிடுங்காப் பயிர் காற்பயிர்.
- கழுதை அறியுமா கற்பூர வாசனை?
- கள்ள மனம் துள்ளும்.
- கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்!
- கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான்.
- கறையான் புற்று பாம்புக்கு உதவுகிறது.
- கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு.
- கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
- கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
- கனிந்த பழம் தானே விழும்.

# பொது அறிவுத்துணுக்குகள்

- சுறா மீனில் 350 இனங்கள் உள்ளன.
- கறுப்பு ஆடை அணிந்து குளிப்பவர்களை சுறாமீன் தாக்குவதில்லை.
- நாய்களுக்கு என்று ஐரோப்பாவில் இரத்த வங்கி உள்ளது.
- தவளையின் இரத்த நிறம் கறுப்பாக இருக்கும்.
- தென்னை மரம் 100 ஆண்டு காலம் ஆயுள் என்றாலும், 80 ஆண்டுகளுக்கு மேல் பலன் தராது.
- இந்தியாவின் முதல் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா.
- முன்னும் பின்னும் பறக்கும் சக்தி படைத்த பறவை ஊங்காரக் குருவி.
- உலகில் முதன்முதலாக வீட்டு விலங்காக கருதப்பட்டது நாய்.
- மனிதனின் தும்மல் மணிக்கு 150 கி.மீற்றர் வேகம் கொண்டது.

# சிறுவர் அரங்கம்

## மந்திர வாளும் இளவரசிக்கான போரும்



நள்ளிரவு வேளையில் அடர்ந்த காட்டில் ஓநாய்களும் பேய்களும் எழுப்பும் சத்தங்களைக் கேட்டு சிறிதும் அஞ்சாமல், வேதாளத்தை சுமந்து நடந்து கொண்டிருந்த விக்கரமாதித்தனிடம் அந்த வேதாளம் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு முறை "சந்திரசேனன்" என்ற மன்னன் "நாகபுரி" என்கிற நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு "ரூபவதி" என்ற மகளிருந்தாள். இளவரசியான ரூபவதி திருமண வயதை எட்டியதும் அவளுக்கேற்ற ஒரு இளவரசனை அவளுக்கு திருமணம் செய்து வைக்க தேடிக் கொண்டிருந்தார் அவளது தந்தை சந்திரசேனன். இதையறிந்த ரூபவதி தன் தந்தை சந்திரசேனன் தேர்ந்தெடுக்கும் இளவரசனை தான் திருமணம் செய்து கொள்ள முடியாதென்றும், மாறாக எந்த இளவரசன் அவனது திறமையை தன்னிடம் நிரூபிக்கின்றானோ, அந்த இளவரசனையே தாம் திருமணம் செய்து கொள்ளப் போவதாக திட்டவட்டமாக கூறி விட்டாள். அவளின் முடிவை ஏற்ற அவளின் தந்தையும் மற்ற நாட்டு இளவரசர்களுக்கு தன் மகளின் சுயம்வரத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்.

அந்த சுயம்வரத்தில் "உபேந்திரன், யோகேந்திரன், தனஞ்செயன்" என்ற மூன்று வேறு வேறு நாடுகளைச் சேர்ந்த இளவரசர்கள் கலந்து கொண்டார்கள். அதில் முதலில் உபேந்திரன் ரூபவதியிடம் சென்று தனக்கு எந்த ஒரு விடயத்திலும் அதன் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலத்தை அறியக்கூடிய திறன் இருப்பதாக கூறினான். இரண்டாவதாக வந்த யோகேந்திரன் தன்னிடம் தான் தயாரித்த அற்புதமான ரதம் ஒன்று இருப்பதாகவும் அது நிலம், நீர், ஆகாயம் என மூன்று வழிகளிலும் பயணம் செய்யக்கூடியது என்று கூறினான். மூன்றாவதாக வந்த தனஞ்செயன் தான் உருவாக்கிய "அற்புத வாள்" ஒன்று தன்னிடம் இருப்பதாகவும் அதை கொண்டு சண்டையிடும் போது எதிராளிக்கு மரணம் நிச்சயம் எனக் கூறினான்.

இதையெல்லாம் கேட்ட ரூபவதி அந்த மூவரில் தான் திருமணம் செய்து கொள்ள விரும்புவது யார்? என்பதை மறுநாள் கூறுவதாகக் கூறி தன் அந்தப்புரம் சென்றாள். மறுநாள் அந்த மூன்று இளவரசர்களும் மற்றும் எல்லோரும் அரசவையில் ரூபவதி வருகைக்காக காத்திருந்தனர். ஆனால் ரூபவதி அரண்மனையில் எங்கு தேடியும் இல்லை என்ற செய்தி வந்தது. அப்போது இளவரசன் உபேந்திரன் தன் முக்கால ஞானத் திறனைக் கொண்டு ரூபவதி சில அரக்கர்களால் கடத்தப்பட்டு, யாருமே எளிதில் செல்ல முடியாத ஒரு மலையுச்சியில் சிறை வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அங்கு செல்வதற்கான வரைபடத்தையும் வரைந்து கொடுத்தான்.

இதைக் கேட்ட யோகேந்திரன் தன்னுடைய அதிசய ரதத்தின் மூலம் யாருமே செல்ல முடியாத அந்த மலைக் கோட்டைக்கு செல்ல முடியும் என்று கூறினான். அப்போது உபேந்திரனும், தனஞ்செயனும் யோகேந்திரனின் அந்த ரதத்தில் ஏறிக்கொண்டனர். உடனே அந்த ரதம் பறந்து அந்த மலை உச்சியை அடைந்தது. அப்போது அங்கிருந்த அரக்கர்கள் இந்த மூன்று இளவரசர்களையும் தாக்க முற்பட்டனர்.

அப்போது இளவரசன் தனஞ்செயன், தன்னிடம் இருந்த அற்புத வாளைக்கொண்டு அந்த அரக்கர்களுடன் சண்டையிட்டு, அவர்களைக் கொன்று அங்கு சிறை வைக்கப்பட்ட ரூபவதியை மீட்டான். பின்பு அந்த நால்வரும் அந்த ரதத்தில் நாகபுரிக்கு திரும்பினர்.

இப்போது அம்மூன்று இளவரசர்களும் ஆளாளுக்கு தங்களுடைய திறனால் தான் இளவரசி ரூபவதி மீட்கப்பட்டதாகக் கூறி, அவர்கள் மூவரும் தங்களுக்கு தான் ரூபவதியை திருமணம் செய்யும் உரிமையுள்ளது என ஒரே நேரத்தில் உரிமை கோரினர். "விக்ரமாதித்தா இந்த மூவரில் யாருக்கு உண்மையில் ரூபவதியை திருமணம் செய்ய உரிமை உள்ளது? என அந்த வேதாளம் கேட்டது.


"உபேந்திரன் அந்த மலையில் இளவரசி சிறை வைக்கப்பட்டிருப்பதையும், அங்கு செல்வதற்கான வழியை மட்டுமே கூறினான். யோகேந்திரன் மற்ற இரண்டு இளவரசர்களுடன் சேர்ந்து, அந்த மலைக்கு தன் அற்புத ரதத்தைக் கொண்டு அங்கு செல்வதற்கு மட்டுமே உதவினான். ஆனால் தனஞ்செயன் தன் அற்புத வாளைக்கொண்டு, வீரத்தோடு அத்தனை அரக்கர்களுடனும் சண்டையிட்டு அவர்களைக் கொன்று, இளவரசி ரூபவதியை மீட்டான். தன்னை நம்பியவர்களைத் தன் உயிரைப் பணயம் வைத்து காப்பவன் தான் சிறந்த மனிதன்.

எனவே இளவரசன் தனஞ்செயனே ரூபவதியை திருமணம் செய்து கொள்ளும் தகுதி உடையவன்" என்ற விக்ரமாதித்தனின் பதிலைக் கேட்டதும் வேதாளம் அவனது பிடியிலிருந்து தப்பி, பறந்து சென்றது.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பசுப்பால்







டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பசுப்பால் மூலிகைகளுள் அடங்கவில்லை.

ஆனாலும் சித்த மருத்துவத்தில் பசுப்பாலின் பாவனை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாலும் தைத்திருநாளில் பொங்கலுக்கு பசுவின் பால் இன்றியமையாததாலும் பசுப்பாலின் மருத்துவக் குணங்களை ஆராய்வோம். சித்த மருத்துவத்தில் பசுப்பால் பச்சைப் பாலாகவும் காய்ச்சிய பாலாகவும், வற்றக் காய்ச்சி ஆடை நீக்கிய பாலாகவும் பல்வேறுபட்ட மூலிகைகளை சேர்த்துக் காய்ச்சிய பாலாகவும், நிறை உணவாகவும் துணை மருந்து அல்லது அனுமானமாகவும் வயது வித்தியாசமின்றி அனைவரும் பாவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பாலில் சிறந்தது பசுவின் பாலே ஆகும். தமிழ் மக்களால் பழைய காலந்தொட்டே இதனுடைய சிறப்புகள் நன்கு உணரப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய பசுவின் பாலில் கருநிறப் பசு, கபிலைப் பசு, செந்நிறப் பசு ஆகிய இப் பசுக்களின் பால்



மிகவும் சிறந்தது. கபிலைப் பசு எனின் பொன்நிறமும், வெள்ளை நிறமும் கலந்த பசுவாகும். பசுவின்பால் ஐந்து பூதத் தன்மைகளும் கொண்டது.

**பசுவின் பாலின் குணம்**

பாலர் கிழவர் பழஞ் சுரத்தோர் புண்ணாளி சூலையர் மேகத்தோர் துர்பலத்தோர் எருமிலர் எல்லார்க்குமாகும். இளைத்தவர்க்குஞ் சாதகமாய் நல்லாய் பசுவின் பால்நாட்டு.

பசுவின் பாலானது குழந்தைகட்கும் கிழவர்கட்கும் பழைய சுரம், புண், சூலை, துர்பலம், மேகரோகங்கள், மெலிவு, (இளைப்பு) ஆகிய இவைகளை உடையவர்கட்கும் சிறந்தது ஆகும்.

காய்ச்சாத பால் பசி தீபனத்தை உண்டாக்கும். காய்ச்சிய பால் சரீரத்தில் உள்ள வெப்பத்தை தணிக்கும். வற்றக் காய்ச்சி ஆடை நீக்கிய பால் நீரிழிவு நோயாளர்கள், கொலஸ்ரோல் அதிகரித்தவர்கள், இருதய நோயாளர்கட்கு உகந்தது ஆகும்.

வெண்மை, செம்மை, கருமை, கபிலை இனமுள்ள பசுக்களின் பாலில் குணம்.

வெண்பசுவின் பால் போக்கும் பித்தத்தை மெய் சிவந்த வண்பசுவின் பால் போக்கும் வாதத்தைக் கண் சிறந்த காராவின் பால் போக்கு மையங்கவிலைப் பால் ஆரமிர்தாந்த தோயு மறுக்கும்.

வெண்மை நிறப் பசுவின் பால் பித்த கோபத்தையும், செம்மைநிறப் பசுவின் பால் வாத தோசத்தையும் கருமை நிறப் பசுவின் பால் கபரோகத்தையும் கபிலை பசுவின் பால் திரிதோசத்தையும் (வாத, பித்த, கப மூன்றினது தோசத்தையும்) போக்கும்.

பகலிற் சுரந்து இரவில் கறக்கின்ற பசுவின் பாலை அளவான தீயில் நீண்ட நேரம் காய்ச்சிப் பருகினால் தேக அழற்சி நீங்கும்.

தேகத்தில் மினுமினுப்பு உண்டாகும். இது பத்தியத்திற்கு உகந்தது. (பகல் முழுவதும் சுரந்திருந்து இரவிற் கறப்பது பகற்பால்).

இரவு முழுவதும் சுரந்து பகலில் கறக்கும் இராப்பாலானது குழந்தைகட்கு உகந்தது.எனினும் கபநோய்களை தோற்றுவிக்கும். உட் சூட்டையும், வெப்பத்தையும் நீக்கும். குழந்தைகட்கு இராப் பாலை (பகலில் கறப்பது) சம அளவு நீர் கலந்து காய்ச்சி அருந்தக் கொடுக்க வேண்டும்.

மட் பாத்திரத்தில் பசுவின் பாலை காய்ச்சி பயன்படும் போது பித்த நோய்களை மேலும் நீக்கக் கூடியதாக இருக்கும்.

ஆடை எடுத்த பாலின் குணம் ஆடையெடுக்கும்பாலக்கினிமந்தப்படுமே வாடை நல்லாய் சீரணமாம் வாத மறுங்-கோடையிடி போலுமெழுந்தபித்தம் போகுமே கூரிய சீர் வேலணை கண்ணாய் விதி

ஏடு நீக்கிய பாலால் அக்னி மந்தப்படும். (செரிமானத்தோடு தொடர்புடையது).

வாதபித்த கப தோசங்கள் நீங்கும். ஆரோக்கியம் பேணப்படும்.

பசுவின் பாலுக்கு சுக்கு, (வேர்க்கொம்பு, சிறுகாஞ்சோன்றி வேர் தட்டிப் போட்டுக் காய்ச்சினால் பாலி னால் ஏற்படும் ஒவ்வாமை (அலெர்ஜி) நீங்கும்.சிலருக்கு பாலின் ஒவ்வாமையால் ஆஸ்மா, சளி, கரப்பான் போன்றவை ஏற்படலாம். அவர்கள் பாலுக்கு சம அளவு நீரும் சுக்கு அல்லது காஞ்சோன்றி வேர் சேர்த்துக் காய்ச்சி அருந்தலாம். சிறந்த பலனைக் கொடுக்கும்.

குழந்தைகட்கு பசுவின் பால் ஒன்றே தனி உணவாக இருக்கின்றது. எனவே கர்ப்பிணித்தாய்மார்கள்,பாலூட்டும் தாய்மார்கட்கு சிறந்த நிறையுணவாக பசுவின்பால் அமைந்து விடுகின்றது.


பசுவின் கறந்த உடன் பாலை சூடு ஆற முன்பு அருந்துவது தாரோகணம் எனப்படும். தாரோகணப்பாலை அருந்துவதனால் கை,கால் எரிவு, இரத்த சோகை, மார்புச்சளி இவை நீங்கும். பலமுண்டாகும்.

பாலில் திப்பிலி, அதிமதுரம், மிளகு இவைகளிலொன்றை சிறிதளவு சேர்த்துக் காய்ச்சி பனை வெல்லம் அல்லது கல்லாக்காரம் சிறிதளவு கலந்து அருந்த தொண்டைக்கட்டு, வறட்டு இருமல் ஆகியன நீங்கும்.

பசுவின் பாலில் புரதச் சத்து, அத்தியாவசிய அமினோ அமிலங்கள், கல்சியம், பொட்டாசியம் விற்றமின் D, (உயிர்ச்சத்து D) என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

உயிர்ச்சத்து D ஆனது புற்றுநோய் உருவாவதை தடுக்கக் கூடியது. அதாவது கலங்களின் வளர்ச்சியை சீர்படுத்தும்.

அத்துடன் பசுவின் பாலானது உயிர்ச்சத்து D இருப்பதால் செரரோனின் எனும் ஓமோனின் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்கிறது. இவ் ஓமோன் உளவியல் பிரச்சினைகளை குறைக்கக் கூடியதாக இருக்கும்.



கல்சியம், பொட்டாசியம் சத்துக்களும் புரதங்களும் போன்ற அமினோ அமிலங்களும் உடம்பிலுள்ள தசைகளின் வலுவைச் சீராக்கும்.

மேலும் பொட்டாசியம் அதிகளவில் காணப்படுவதால் இது உடம்பில் சோடியத்தின் அளவைக் குறைக்கும். இலை குருதியின் கனவளவைக் குறைத்து இரத்த அழுத்தத்தை குறைக்கும். அத்துடன் பொட்டாசியம் இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்யும். இதனாலும் அதிகரித்த



இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். எனவே இருதய நோயாளிகளும் பசுவின் பாலை பயன்படுத்தலாம். அதாவது சம அளவு நீர் சேர்த்து அளவான நெருப்பில் மண்சட்டியில் காய்ச்சி வற்றக் காய்ச்சி ஆடை நீக்கி பயன்படுத்தினால் பசுவின் பாலின் சிறந்த பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். உயிர்ச்சத்து D, கல்சியம், பொட்டாசியம் சத்துக்கள் உள்ளதால். என்புகளையும் மூட்டுக்களையும் பலப்படுத்தும்.

அத்துடன் உயிர்ச்சத்து D, கல்சியம், பொட்டாசியம் சத்துக்கள் அதிகம் இருப்பதால் மூளைக் கலங்களின் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமானது பசுப்பாலாகும்.

எனவே புட்டிப்பால், மாலை பால்மாக்களை தவிர்த்து பசுப்பாலின் பிரயோகத்தை மக்கள் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.அதே வேளை பசுக்களை அவிழ்த்து பல்வேறுபட்ட இலை. குழை. மூலிகை வகைகளை உண்டுவர விட வேண்டும். இப்படி மேயும் பசுக்களின் பால்தரமானதாகவும் இருக்கும்.

நாணயமாக இருப்பவர்கள் ஒளிக்கும், இருளுக்கும் என்றும் அஞ்சுவதே இல்லை.
- கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பொங்கல் தொடர்ந்தாலும் நன்றி மறந்தாயிற்று

இன்று தைப்பொங்கல். பூமியில் பயிர்கள் விளைந்து மானிடர் உள்ளிட்ட ஜீவராசிகள் பசியாறுவதற்கு மூல காரணனாய் நிற்கின்ற சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகத் தைப்பொங்கல் அமைகிறது.

நிலத்தை உழுது பயிரை விளைவித்த விவசாயிகள் தங்களின் வேளாண் செய்கைக்கு உதவிய சூரியபகவானுக்குச் சர்க்கரைப் பொங்கல் செய்து முக்கனிகளும் பசும் பால், நெய், தேன் வகைகளும் சேர்த்துப் படையல் செய்து, சூரியபகவானுக்குத் தமது நன்றியைத் தெரிவிக்கின்ற நாளாகத் தைப்பொங்கல் திருநாள் அமைகிறது.

தமிழர் திருநாள் என்று போற்றப்படுகின்ற தைப்பொங்கல் தட்சணாய காலம் கடந்து, உத்தராயண காலம் தொடங்கும் தைமாதத்தை வரவேற்கின்ற பொங்கலாகவும் அமைகிறது.

அறுவடை செய்த தானியங்களைக் கொண்டு பொங்கல் செய்து சூரியபகவானுக்கு நன்றி பாராட்டுகின்ற உயர்ந்த பண்பாடு தமிழ் இனத்துக்குப் பெருமை தருவதாகும்.

எனினும் இன்றைய சமகாலத்தில் தைப் பொங்கல் என்பது வெறும் பொங்கலாக்த் தொடர்கிறதேயன்றி, அதற்குள் இருக்கக் கூடிய நன்றி என்ற உணர்வு மறக்கப்பட்ட விடயமாயிற்று.

தவிர, தமிழர் திருநாள் என்ற பேரால் பாதணிகளுடன் நின்று பொங்கல் செய்கின்ற கலாசாரமும் மேலைத்தேய காற்சட்டைகள் அணிந்து கொண்டு பொங்குகின்ற பண்பாடும் எங்களிடம் ஊடுருவிவிட்டது.

உண்மையில் தைப்பொங்கல் என்பது புனிதமானது. சூரியபகவானைக் கடவுளாகப் போற்றுகின்ற தமிழ் மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி தூயவஸ்திரம் அணிந்து சிவ தீட்சைக்கான அனுட்டானம் பார்த்து, கோலமிட்டு சாணத்தால் மெழுகி அடுப்பு வைத்து புதிய பானையில் பொங்கல் செய்து அதனைச் சூரியபகவானுக்குப் படைத்து தேவராத் திருமுறை ஓதி, தூப தீபங்களாலும் பூக்களாலும் சூரியனுக்குப் போற்றுதல் செய்து எங்கள் நன்றியைத் தெரிவிப்பதே சூரியப் பொங்கலாம்.

எனினும் இப்போது இவை எதிர்பார்க்க முடியாததாயிற்று.

பொட்டலம் செய்யப்பட்டு பொங்கல் பொதி என்று விற்க, அதனை வாங்கி வந்து ஆசாரம் ஏதுமின்றி அடுப்பேற்றி பொங்குவதும் பருவத்தால் பழுக்காத காய்களுக்கு மருந்து தெளித்து நஞ்சேற்றிப் பழுக்க வைத்து படையல் செய்கின்ற நாகரிகமும் வந்து விட்ட பின்பு சூரியன் தான் என்ன செய்ய முடியும்.

எதுவாயினும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழரின் நம்பிக்கை. எனவே இன்று தைப்பிறப்பு. பழையன கழிந்து புதிய உத்வேகத்தில் எங்கள் வாழ்வைத் தொடங்க தைப்பொங்கல் பொங்கட்டும்.

தமிழ் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் சாந்தியும் நிலைக்கட்டும். இதற்கு கண்கண்ட கடவுளாய் - இயற்கையின் சாட்சியாய் விளங்கும் சூரியபகவான் உதவட்டும்.

# அரசியல் தீர்விற்கு முன்னர் தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை பலப்படுத்த வேண்டும்

## மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்விற்கு முன்னர் தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை பலப்படுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று காலை அலரி மாளிகையில் தமிழ் ஊடகங்களின் பிரதானிகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்றிருந்தேன். அங்குள்ள மக்கள் பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேபோன்று வடக்கின் சில இடங்களிலுள்ள மக்கள் உணவு மற்றும் குடிநீரினை பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். முதலில் இந்த பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினை காண வேண்டும்.

கடந்த அரசாங்கம் அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரங்களை மாத்திரமே தாக்கல் செய்திருந்தது' எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# ரஞ்சனின் குரல் பதிவுகளை நிறுத்தவும்

## - ஞானசாரர்

(கொழும்பு)

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்களை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கையெடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் பொது பலசேன அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-3)

# ஏர்முனை சஞ்சிகை அறிமுக நிகழ்வு

(குப்பிழான்)

இயற்கைப்பூச்சிவிரட்டிகள், இயற்கைப் பசளைகள்செய்முறைகளைத் தாங்கிய "ஏர்முனை சிறப்பிதழ்" வெளியீட்டு நிகழ்வு தைப்பொங்கல் திருநாளான இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை ஊரெழுவிலுள்ள மார்கோசா கிறீன் விடுதியில் இடம்பெறும்.

பூச்சிவிரட்டிக் கரைசல்கள், இயற்கைப் பசளைகள் தொடர்பான விபரங்களைத் தாங்கிய ஏர்முனை சஞ்சிகையைப் புதிய வெளிச்சத்தின் அனுசரணையுடன் இயற்கைவழி இயக்கம் நெடுங்கேணிப் பண்ணையாளர் சங்கத்துடன் இணைந்து வெளியிடுகின்றது.

ஏர்முனை சிறப்பிதழினை அதன் ஆசிரியரும், விவசாயப் போதனாசிரியரும், இயற்கைவழிச் செயற்பாட்டாளருமான மாவடியூர் சூ.சிவதாஸ் தொகுத்துள்ளார். (இ-18)

# கால்கோள் விழா

(புன்னாலைக்கட்டுவன்)

யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் தரம்-01மாணவர்களின் கால்கோள் விழா நாளை வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் உப அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.ஶ்ரீதர் கலந்து கொள்ளவுள்ளார். (ம-78)

# கோப்பாய் உப அலுவலகம் தற்காலிகமாக புதிய இடத்தில்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகம் திருத்தியமைக்கப்படவுள்ளமையால் 2020.01.13 ஆம் திகதி முதல் தற்காலிகமாக இலங்கை வங்கிக் கோப்பாய்க் கிளைக்கு அருகாமையில் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான புதிய சந்தைக் கட்டடத்தில் இயங்கி வருவதாக சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

மேலும் பொது மக்கள் தமது தேவைகளை புதிய இடத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியுமெனவும் திருத்த வேலைகள் முடிவுற்றதும் மீண்டும் பழைய இடத்தில் கோப்பாய் உப அலுவலகம் இயங்க ஆரம்பிப்பது குறித்து அறியத் தரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# பொதுத் தேர்தலில் ஒரு கோடி 62 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்புப் பணிகள் பூர்த்தியடைந்திருப்பதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, இவ்வருடத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் சுமார் ஒரு கோடியே 62 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாகவும் கூறினார்.

இறுதியாக கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 50இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். கடந்த செப்டெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் மூலம் சுமார் மூன்று இலட்சம் புதிய வாக்காளர்கள் பதியப்பெற்றுள்ளனர்.

இதில் சுமார் இரண்டு இலட்சம் இளைஞர்கள் புதிய வாக்காளர்களாக தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். வரக்கூடிய தேர்தல்களில் வாக்களிப்போரில் சரி பாதியளவு இளைஞர்களும் பெண்களுமே இருப்பரெனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமான அறிக்கையை வெளியிடவுள்ளதோடு அன்றைய தினமே புதிய வாக்காளர் இடாப்பு குறித்த வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிடுவார். (இ-7)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உழைப்பு உடலை வலிமைப்படுத்தும். கஷ்டங்கள் உள்ளத்தை வலிமைப்படுத்தும்.

-பிளெமிங்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ்.நுண்கலைப்பீடம், கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம் தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சூடுவெந்தபுலவு, அவுசதப்பிட்டிய கிராமம், சாளம்பைக்குளம், ஈரப்பெரிய குளத்திலிருந்து பூஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், பூ ஓயா இராணுவ முகாம், Recobo North ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# ஆன்மீகச் சிந்தனைகள்

## வாழ்வின் உயிர்நாடி எது?

❖ உன்னைப் புகழும்போது மகிழ்ச்சி அடையாதே. இகழும்போது கவலையும் அடையாதே.

❖ மரம் தன்னை நாடி வருபவருக்கு நிழல் தந்து உத்வுவது போல, மனிதனும் தன்னை நாடி வந்தவருக்கு உதவ மறுப்பது கூடாது.

❖ தூய உணவை உண்ணும்போது தூய எண்ணம் உண்டாகும். அதனால், உணவு சமைக்கும்போது நல்லெண்ணத்துடன் சமைக்க வேண்டும்.

❖ உலகில் செய்த தர்மம் ஒன்றே என்றென்றும் அழிவில்லாமல் இருக்கும். பொன், பொருள் போன்ற செல்வம் நம் கண் முன்னே காணாமல் போய் விடும்.

❖ பசுவைப் போன்ற நல்லவர்களிடம் பழகுங்கள். பாம்பு போன்ற கொடியவர்களிடம் விலகி நில்லுங்கள்.

❖ பணிவுடைமை மனித வாழ்வின் உயிர்நாடி. அதனால், நம் வாழ்க்கைத் தரம் உயர்வு அடைகிறது.

❖ போற்றுதலையும், தூற்றுதலையும் சமமாகக் கருதுபவர்களின் உள்ளத்தில் அமைதி குடியிருக்கும்.

❖ பிறருடைய குற்றங்களை அலசி ஆராய்வது கூடாது. நாம் செய்த குற்றத்தை மூடி மறைப்பது கூடாது.

# மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வேரவில் கலைமகள் அணி வெற்றிக்கிண்ணம்






தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகம், பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பூநகரி நகரில் அமைந்துள்ள மத்திய நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக 9, 10,11 ஆம் திகதிகளில் காலை தொடக்கம் மாலை வரை மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தியது.

இப் போட்டியில் இருபதுக்கு மேற்பட்ட கழகங்கள் பங்கு பற்றின. இறுதி நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.


இறுதிச் சுற்றில் நாச்சிக்குடா சென்.மோரிஸ் அணியும் வேரவில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இறுதி நிலை வரை யாரும் கோல் போடாத நிலையில் (சமநிலை)தண்ட உதை மூலம் வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியினர் வெற்றி பெற்று பூநகரி பிரதேச சம்பியனாக உழவர் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டனர்.

மின்னொளியில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகவும் கிழக்கு மாகாண மத்திய வங்கி முகாமையாளர் எஸ்.பிரபாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-84)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சின்மயாமிஷன் சுவாமிகளின் பொங்கல் வாழ்த்துச் செய்தி



தற்போது ஈழத்தில் பல ஏக்கர் கணக்கான நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. மண்ணுக்காகத் தமிழினம் போராடிய நிலையில் இவ்வாறு நிலங்கள் கவனிப் பாரற்றுக் கிடப்பது கவலையைத் தருகிறது. எமது இளையவர்கள் பலரும் வேலைவாய்ப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் சூழலில் அவர்களுடைய மனதில் அரசாங்க வேலை வேண்டுமென்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துள்ளது.

இவ்வாறான எண்ணத்தைப் படிப்படியாக மாற்றிச் சுயதொழில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய வகையில் நெல் மற்றும் தென்னை, பனை போன்ற எங்கள் மண்ணின் பெருமைகளைப் பறைசாற்றுகின்ற மரங்களை நாட்டி ஒரு பசுமை வேளாண்மைப் புரட்சியை ஏற்படுத்த எங்களுடைய இளைஞர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு எமது இளைஞர்கள் முன்வருவார்களாயின் புலம்பெயர் தேசத்திலுள்ள எமது உறவுகள் அதற்குப் பக்கபலமாகப் பொருளாதார உதவிகளை செய்ய முன்வருவார்கள். இதன்மூலம் நாம் தன்னிறவுப் பொருளாதார வளச்சியை எட்ட முடியும் என்பதுடன் தமிழர்களாகிய நாம் இந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழவும் முடியும்.

எனவே, இதனைச் செயற்படுத்த முன்வர வேண்டுமென எமது இளைஞர்களுக்கும், புலம்பெயர் உறவுகளுக்கும் தைப் பொங்கல் திருநாளில் அன்பான வேண்டுகோளாக விடுக்கின்றேன்

தைப்பொங்கல் திருநாளானது தமிழர்களின் பண்டிகையாக, இந்துசமயம் சார்ந்த தத்துவங்களை எடுத்து விளக்குவதாக வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தைமாதத்தின் முதல்நாளாகத் தைப் பொங்கல் பண்டிகை விளங்குகிறது. இயற்கை சக்தி முதலாகிய சூரியன் தனது உத்தராயண காலத்தை ஆரம்பிக்கின்ற நாளாகவும் தைப்பொங்கல் திருநாள் காணப்படுகின்றது. சூரியன் வடதிசை நோக்கி ஆரம்பிக்கின்ற காலப் பகுதி தேவர்களுக்கெல்லாம் பகல் பொழுது ஆரம்பிக்கின்ற காலமாகவும் அமைந்துள்ளது.

சூரியன் இந்தப் பூமிக் கிரகத்தை ஆசிர்வதித்து வருகிறான். அவனுடைய ஒளியினால் தாவரங்களில் ஒளித் தொகுப்பு நடைபெற்று எங்களுக்கு உணவு கிடைக்கிறது. சூரியன் இல்லையென்றால் நாங்களில்லை. அந்தச் சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக உழவர்கள் அறுவடையின் பின்னர் பொங்கிப் படைத்து சூரியனுக்கு நன்றி செலுத்தும் நன்னாளாகவும் இந்த நன்னாள்அமைந்துள்ளது.

இயற்கையை நேசிக்கும் நாளாகவும், உழவர்களைக் கௌரவப்படுத்தும் நாளாகவும் இந்தநாள் விளங்குகிறது. இன்றைய நாளில் தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிதாகாசானந்தா சுவாமிகள் வதிவிட ஆச்சாரியார்
சின்மயா மிஷன் யாழ்ப்பாணம்.

# இறுதிச் சுற்றுக்குள் நுழைந்த நாவற்குழி ஐக்கியம் அணி



நுணாவில் பாரதி விளையாட்டுக்கழகம் அமரர்.விக்கினசூலனின் நினைவாக மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாவற்குழி ஐக்கியம் அணியினர் மீசாலை சீமா அணியினரை முதலாவது சுற்றுப்போட்டியிலும் கைதடி வளர்மதி அணியினரை இரண்டாவது சுற்றுப்போட்டியிலும் வெற்றி பெற்று அரையிறுதியில் சாவகச்சேரி நியூபவர் அணியினரையும் வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட நாவற்குழி ஐக்கியம் அணியினர் எதிர் வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தை எதிர் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# குருநகர் பாடும்மீன் அணி வெற்றி

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ.பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

ஆட்ட முடிவில் 4-0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (ஜ-2-106)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# பிரதேச செயலக மட்ட மேசைப்பந்தாட்டம் வளர்மதி மற்றும் சி. ஆர்.சி. அணிகள் சம்பியன்

தென்மராட்சியில் பிரதேச செயலக ரீதியாக கழகங்களுக்கு இடையே நடைபெற்று வருகின்ற விளையாட்டு நிகழ்வின் ஓர் அங்கமான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன. இதில் ஆண்கள் அணியில் சங்கத்தானை சி.ஆர்.சி.விளையாட்டுக் கழகமும் பெண்கள் அணியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் சம்பியனாகின. அதேவேளையில் ஆண்கள் அணியில் டச் வீதி தென்னகத் தாரை விளையாட்டுக் கழகமும் பெண்கள் அணியில் சி.ஆர்.சி விளையாட்டுக் கழகமும் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டன. (ஜ-2-30)

# ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை நட்பு நாடுகளுடன் எதிர்கொள்வோம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா விவகாரத்தினை நட்பு நாடுகளுடன் இணைந்து எதிர்கொள்வோம் என பிரதமர் மகிந்த தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை அலரிமாளிகையில் தமிழ் ஊடகங்களின் பிரதானிகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.



இதன்போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான விவகாரத்தை நட்பு நாடுகளுடன் இணைந்து எதிர்கொள்வோம். இதுகுறித்து நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எவ்வித சவால்களும் இல்லை.

இலங்கையில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளமை காரணமாக இலங்கை விவகாரம் குறித்து ஜெனிவாவில் பேசப்படாது என எதிர்பார்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தமிழருக்கு வேலை வழங்காது...

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற தமிழ் ஊடகங்களின் பிரதானிகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நான்கரை ஆண்டுகளாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பல்வேறு வரப் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்களின் பிள்ளைகள் வெளி நாடுகளில் கல்வி கற்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு வாக்கு அளித்த தமிழ் மக்கள் எந்த நன்மைகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜெனிவா விவகாரம் தமிழ...

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் அலிஸ் வெல்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள பிரேரணை, சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## டெங்கால் மன்...

வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி விடுமுறையில் சென்ற அநுராதபுரம், தளாவப் பகுதியை சேர்ந்த எஸ்.ரத்னாயக்க (வயது-28) என்ற பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதற்கு முன்னர், மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மதவாச்சி - ஹெத்தாகட ஹெட்ட, வீரகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பி.சீ.பியரத்தின (வயது-45) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற மேலும் 4 பொலிஸ் அதிகாரிகள் காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தென்னை மரத்தி...

தென்னை மரத்திலிருந்து தவறுதலாக விழுந்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சரசாலைப் பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## குற்றப்புலனா...

மருத்துவ சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நிலையில், அவர் நேற்று குற்றப் புலனாய்வு பிரிவில் முன்னிலையாகியிருந்தார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் இருதய நோய் காரணமாக ராஜித சேனாரத்ன அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகளின் பின்னர் நேற்று முன்தினம் ராஜித சேனாரத்ன வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தார்.

வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பான வழக்கில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-3)

## உலகின் பலம்வாய்நத நான்கு...

வெளிவிகார அமைச்சர் வேன்ங் ஈ, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கே லெவ்ரோவ் மற்றும் ஜப்பான் இராஜாங்க அமைச்சர் கொசோயம மோடோ ஆகியோர் நேற்று பிற்பகல் வரை இலங்கையில் தங்கியிருந்தனர்.

வீழ்ச்சியுற்றிருக்கும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தனது பதவிக் காலத்தினுள் எதிர்பார்க்கும் முக்கிய விடயமாகும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலகின் பலம்வாய்ந்த நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகவுள்ள அனைத்து துறைகளிலும் துரித அபிவிருத்தியை அடைந்து நாட்டை முன்கொண்டு செல்லும் முயற்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வெளி நாட்டு பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ம-3)

## ரஞ்சன் ராமநாயக்க நேற்று...

அவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு பிடியாணை ஒன்றை பெற்றுக் கொள்ளமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளருக்கு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனையடுத்து ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நுகேகொட நீதவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்தது.

அதனடிப்படையில் அவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க மேற்கொண்ட சர்ச்சைக்குரிய அலைபேசி உரையாடல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## கைது - தண்டனையின் பகுதி...

பணிப்புரை விடுத்துள்ளார்.

எவரேனும் ஒரு நபரை கைது செய்யும் நடவடிக்கை இடம்பெற வேண்டியது குறித்த பொறுப்பை நிறைவேற்றும் அதிகாரியின் தொழில்சார் தீர்ப்பின் அடிப்படையிலாகும் என்றும் அக்கடமை சுயாதீனமாகவும் எவ்வித பயமுறுத்தல் அல்லது அனுசரணையின்றி இடம்பெறுவதை உறுதிசெய்து கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

பாரர்ளுமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகள் மற்றும் வைத்தியர்கள் போன்ற தொழில்வல்லுநர்கள் தொடர்பில் மேற்படி கடமையினை நிறைவேற்றும் போது பொலிஸ் அதிகாரிகளினால் கைது செய்யப்படும் நபருக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்.

மேலும் இந்த அறிவுறுத்தல்கள் அனைத்து இலங்கைப் பிரஜைகள் தொடர்பிலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி ஏற்புடையதாகும் என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளி நோக்கங்களுக்காக செயற்படக் கூடாது என்றும் எவ்வித தேவையற்ற அழுத்தங்களுக்கும் அடிபணிய வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தூரநோக்குடன் உரிய முறையில் கடமையை நிறைவேற்றுமாறும் தேவையான போது சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் செயற்படுமாறும் ஜனாதிபதியின் செயலாளரினால் பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்னவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-3)


P 04 10 32 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,586,850
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 852 — வர்ணம் : இளநீலம் — சீட்டிழுப்பு திகதி: 2020.01.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,330,525/-
வெற்றி இலக்கங்கள் 21 22 39 65 O

ஜயோதா — சீட்டிழுப்பு வாரம் 1638 — சீட்டிழுப்பு திகதி 14/01/2020
வெற்றி இலக்கங்கள் 19 25 30 47 T
ரூ. 44,591,892

ராசி அதிர்ஷ்டம் — திகதி 14.01.2020 — வெற்றி வாரம் 2738 — வர்ணம் சிவப்பு
மீனம் 02 18 41 60 — புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,941,174
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

மஹஜன சம்பத — திகதி 2020/01/14 — சீட்டிழுப்பு இலக்கம் 4092 — C 8 7 5 1 6 1

செவன — திகதி 14/01/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 253 — Z 08 16 47 68

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 14-01-2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2361 — I 06 13 18 34

நீரோகா — திகதி 2020/01/14 — சீட்டிழுப்பு இலக்கம் 649 — இடபம் 30 32 48 51

## நடிகர்கள் தேவை

எங்களது 2ஆவது தமிழ் சினிமாவில் நடிக்க கனடா, பிரான்ஸ் நாடுகளில் படப்பிடிப்புக்கு செல்ல நடிகர்கள் தேவை.

076 684 1113 (1864)

## Distributors தேவை

வருமானம் மாதம் 80000க்கும் மேல் (1864)

Call - 076 684 1113

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயில் முன்பாக 3/4 பரப்புக் காணியுடன் 2 அறைகள் Hall, Kitchen கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

விலை - 1 கோடி 30 லட்சம்
விலை பேசித் தீர்மானிக்கப்படும்

(1876)

தொடர்பு:
077 046 9631
077 004 5610

## வாடகைக்கு

நெல்லியடி பிரதான வீதி (எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமையில்) (19x22), (11x22) அளவில் இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(C-8971)

தொடர்புகளுக்கு:
077 835 5729
077 870 3890


# இலங்கையுடனான உறவு வலுப்படும்

## அமெரிக்கா எதிர்பார்ப்பு

இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்த அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் அலிஸ் வேல்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அலிஸ் வேல்ஸ், நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது "சுற்றுச்சூழல் மற்றும் வர்த்தகம், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் மீதான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்க்கிறது.

இவற்றினை மூலம் இரு நாடுகளும் பயனடையும்" என அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் அலிஸ் வேல்ஸ் தெரிவித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)


## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை (1878)

076 239 9874

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg

(C-8958)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240

V2 TRAVELS

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8885)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## Apex Travels இன்

APEX TRAVELS



### இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

- சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- விசா ஒழுங்கமைப்புக்கள், பிரயாணக் காப்புறுதி (Travel Insurance) திகதி மாற்றம், ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து தரப்படும்.
- விசா ஒழுங்கமைப்புக்கள்:- UK, Australia, Canada மற்றும் சகல ஐரோப்பிய நாடுகளுக்குமான விசா ஒழுங்கமைப்புக்கள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

(C-8990)

தொடர்புகளுக்கு:-
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0773504700/0763333644/0212228008
fly@apextravels.lk

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8886)

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்


## New Sun Ceramics (pvt) Ltd

NEW SUN

Elegance quality- Affordable

தைத்திருநாளை முன்னிட்டு
விசேட விலைக்கழிவைப் பெற்றுக் கொள்ளலாம்

கிளிநொச்சியில் நீங்கள் கண்டிராத எண்ணிப் பார்க்க முடியாத புதிய வடிவங்களிலான Floor Tiles Wall Tiles மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியானதும் தரமானதாகவும் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்.



(C-8959)

New Sun Ceramics (pvt) Ltd
A-9, Kandy Road, Kilinochchi
(apposite to the old Hospital.
Tel No:- 021 228 3872

நியூ சன் செரமிக் (பிரைவெட்) லிமிடெட்
A-9 கண்டி வீதி, கிளிநொச்சி.
(பழைய மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக)
Tel No:- 021 228 3872

## இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

Happy Pongal



JITF 2020

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

11 EDITION

24, 25, 26 ஜனவரி / January
10.00 am - 8.00 pm
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

jitf.lk
www.jitf.lk

RIZWAN +773 959 835 rizwan@saexhibitions.com

PLATINUM SPONSOR: INSEE CEMENT

OFFICIAL PARTNERS: TELECOMMUNICATION Sri Lanka Telecom Mobitel; FOOT WEAR DSI; FOOD; COSMETICS British Cosmetics; POWER TOOLS DIMO; PRINT MEDIA

ORGANIZED BY LECS LANKA EXHIBITION; IN ASSOCIATION WITH CCNP; ENDORSED & SUPPORTED BY; PARTNER COUNTRY India

(C-8991)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.